வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 16.01.2023 திங்கட்கிழமை இதழ் : 38 பக்கங்கள் : 16




# ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம்



- போராடியோர் மீது நீர்த்தாரை பிரயோகம்
- நல்லூர் - அரசடி பகுதியில் பெரும் பதற்றம்





*யாழ்ப்பாணம், ஜன. 16*

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தை தண்ணீர் தாரை பிரயோகம் செய்து பொலி

15

# 13ஆம் திருத்தம் விரைவில் முழுமையாக நடைமுறை!



## யாழ். வந்த ஜனாதிபதி உறுதி

- அடுத்த வாரம் சர்வகட்சி தலைவர் சந்திப்பு
- காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விரைவில் மற்றோர் ஆணைக்குழு
- சிங்களவர்களுக்கும் பிரச்னைகள் உள்ளன

யாழ்ப்பாணம், ஜனவரி 16

அடுத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். இது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்னையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்தக் கோருகின்றனர். ஓரிரு வருடங்களில் கட்டம்கட்டமாக செயல்படுத்தப்படும் - என்று நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

15



## 69 இலங்கையர்களுடன் படகு ரியூனியன் தீவில் ஒதுங்கியது

*பாரிஸ், ஜன. 16*

பெண்கள், குழந்தைகள் அடங்கிய 69 பேருடன் வந்த இலங்கை அகதிகளின் மீன் பிடிப் படகு ஒன்றை ரியூனியன் தீவுக்கு அருகே பிரெஞ்சுப் படையினர் மீட்டிருக்கின்றனர். கடற்படையின் ஜொந்தாமேரி படையினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை உள்ளூார் நேரப்படி 04.40 மணிக்கு ரியூனியன் தீவின் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது.

15

## ரியூனியனுக்கு இலங்கையர் அகதிகளாக வருவது ஆபத்து!

### பிராந்திய பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

*பாரிஸ், ஜன. 16*

இலங்கையில் இருந்து படகில் புறப்பட்டு இந்துமா கடலின் தெற்கு மண்டலம் முழுவதையும் தாண்டி ரியூனியன் தீவுக்கு வருவது என்பது மிகவும் ஆபத்தானது. சந்தேகத்துக்கு இடமின்றி அது மிகச் செலவானது. அதேசமயம் அனைவரும் அங்கிருந்து அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்பதும் உறுதி. இந்தச் செய்தியை நாங்கள் இங்கிருந்து இலங்கைக்கு விடுக்க விரும்புகின்றோம்.

- இவ்வாறு

15

## தமிழரின் தியாகங்களை நினைவுகூரும் தருணமிது!

### பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்



*லண்டன், ஜன. 16*

இலங்கையில் சுயநிர்ணய உரிமை, சமாதானம் மற்றும் நீதி ஆகியவற்றை அடைவதற்காக தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை தைப்பொங்கல் தினத்தன்று நினைவுகூருவதாக

15

### புதிய விடியல் உதைபந்தாட்டம்:

## சென். மேரீஸ் – சென். நீக்கிலஸ் இறுதியாட்டத்தில் இன்று மோதல்!

*யாழ்ப்பாணம், ஜன. 16*

டான் தொலைக்காட்சி குழுமம் நடத்தும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் நாவாந்

15

## புதிய தேசிய பாதுகாப்பு சட்டம் அடுத்தவாரம் அமைச்சரவைக்கு!

*கொழும்பு, ஜன. 16*

புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக இந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும். புதிய சட்டமூலத்தை அடுத்த வாரத்துக்

15

## பாடசாலைகள் இன்று நடக்கும்!

*கொழும்பு, ஜன. 16*

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் வழக்கம் போல் இன்றைய தினம் கற்றல் நடவடிக்கைக் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தைப்பொங்கல் தினமான நேற்று

15

## வலி. வடக்கில் 108 ஏக்கர் உடன் விடுவிக்கப்படும்!

### ஜனாதிபதியுடனான கூட்டத்தில் முடிவு

*யாழ்ப்பாணம், ஜன. 16*

வலி. வடக்குபிரதேசத்தில் 108 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும் என ஜனாதிபதி தலைமையிலான கலந்துரையாடலில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல், ஜனாதிபதி தலை

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர், எஞ்சியிருந்த இரண்டு பங்காளிக் கட்சிகளும் மேலும் சில தமிழ்த் தேசியக் கட்சிகளை இணைத்துக் கொண்டு கூட்டமைப்பை இன்னும் பலமாகக் கொண்டு செல்ல முயற்சி செய்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டன.

ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியையும், விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியையும் ரெலோவிலிருந்து பிரிந்து புதிய கட்சியாக (பதிவுசெய்யப்படாத போதிலும்) இயங்கிக் கொண்டிருந்த சிறீகாந்தா - சிவாஜிலிங்கத்தின் தமிழ் தேசியக் கட்சியையும் ஜனநாயக போராளிகள் கட்சியையும் சேர்த்துக்கொண்டு பயணிக்க அவர்கள் முயன்றபோதிலும் விக்னேஸ்வரன் தனித்து செல்வதென்று முடிவெடுத்துவிட்டார்.

இந்த அணியில் இணைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி பற்றிய சர்ச்சையே இந்த அணியில் விக்னேஸ்வரன் சேர்ந்து கொள்ளாதமைக்கு பிரதான காரணம் என்று அவரே கூறியிருந்தார். ஆனால், அவர் அதற்கு கூறிய காரணம்தான் பலரையும் கோபப்படுத்தியிருக்கின்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் இந்த அணியில் இணைவதற்கு முதல்நாள் வரை தமிழரசு கட்சியின் துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயாவுடன் நெருக்கமாக இருந்தவர்கள். கூட்டமைப்பில் அவர்களும் ஓர் அங்கம் என்றே தமிழரசுக்காரர்கள் தொடர்ந்து கூறிவந்தனர்.

ஆனால், அவர்கள் குறித்து விக்னேஸ்வரன் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை தமிழரசுக்கார்களும் இப்போது கூறத் தொடங்கியிருப்பதை சமூகவலைத் தளங்களில் காணமுடிகின்றது.

இவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதன் மூலம் தமிழரசினர் 'சேம் சைட் கோல்' அடித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தப் பத்தியில் பல தடவைகள் அதுபற்றி குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது விடுதலைப் புலிகள் பல்வேறு அரசியல் கட்சிகளாக பிரிந்து கிடந்த தமிழ் அரசியலில், அனைத்து தரப்பினரையும் ஓரணியில் கொண்டுவரவேண்டும் என்று கூட்டமைப்பை உருவாக்க முற்பட்டபோது, அவர்களில் நல்லவர் யார், அவர்கள் துரோகிகளா - தியாகிகளா என்பது பற்றியெல்லாம் கண்டுகொள்ளவில்லை. அப்போதிருந்த கட்சிகள் எல்லாவற்றையுமே இணைத்து கூட்டமைப்பை உருவாக்கினர்.

இப்போதும் அதுபோன்ற ஓர் ஒற்றுமை அவசியமானது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கை ஓங்கி ஒலித்து வருகின்றது.

இவ்வாறு ஒன்றிணையும்போது, அந்த துரோகி - தியாகி கோஷம் என்பது அவசியமற்றது. அதையும் மீறி யாராவது அதுகுறித்து கோஷமிடுவார்கள் என்றால், அது முன்னர் இவ்வாறான கூட்டமைப்பை உருவாக்கிய விடுதலைப் புலிகளின் தலைமையை விமர்சித்து கோஷமிடுவது போன்றதே.

சந்திரிகா காலத்தில் சம்பந்தனுக்கு அதி உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டது. சிங்கள தேசியவாதிகளிடமிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக அல்ல. விடுதலைப் புலிகளிடமிருந்து அவரைப் பாதுகாப்பதற்காகவே. அதாவது, அப்போது அவரும் அந்த துரோகிகள் பட்டியலில்தான் இருந்தார். அதிகம் ஏன் கடைசியாக நல்லாட்சி காலத்தில் சுமந்திரனுக்கு அதிரடிப் படை பாதுகாப்பு கொடுத்ததும் சில தமிழர்களால் அவருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது என்று கூறியே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துகொள்வதற்கான பேச்சுகளிலிருந்து வெளிநடப்பு செய்த விக்னேஸ்வரன், தான் ஏன் வெளியேறினேன் என்பதை விளக்கி ஊடக மாநாடு நடத்தியபோது,

'ஜனநாயகப் போராளிகள் கட்சி பல்வேறு குழுக்களுடன் தொடர்புடையதாக நான் அறிந்தேன். புலிகளோடு இருக்கும் போது அவர்கள் எப்படி இருந்தார்கள் என்றும் தற்போது அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதனையும் நாம் அறிய வேண்டும்.' என்று கூறியிருந்தார்.

ஜனநாயகப் போராளிகள் என்பது முன்னாள் புலிகள் என்பதும், அவர்கள் புலிகள் இயக்கத்தில் இருந்துபோது எப்படி இருந்தார்கள் என்றும் கேள்வி கேட்கும் அவர், ஒன்றை இலகுவாக மறந்துவிடுகின்றார்.

தான் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது, சட்டத்தை மாத்திரம் கருத்தில்கொண்டு வழக்குகளில் தீர்ப்பு வழங்கியபோது எப்படியொரு சூழ்நிலையில் பயங்கரவாத தடைச் சட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கினாரோ அதேபோன்ற நிலையில்தான் முன்னாள் போராளிகள் இப்போது இருக்கலாம். அதற்காக அவர்களை - அவர்களின் கடந்த கால தியாகங்களை கொச்சைப்படுத்த முடியாது.

வடக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்பதற்காக அவர் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தபோது, அவர்மீது யாரும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தாதது அவருக்கு வசதியாக இருந்ததுதான் இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.!

- ஊர்க்குருவி

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நேற்று தைப்பொங்கல் நிகழ்வு!

வடமராட்சி, ஜன. 16

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி - துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய சிறப்பு பொங்கல் பூசைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணி முதல் சிறப்பாக நடைபெற்றன.

வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதம குரு கணபதி ஈஸ்வர குருக்கள் தலைமையிலான குருமார்களால் காலை 5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சிறப்பு பூசைகளாக ஹோமம் வளர்த்து பின்னர் வசந்த மண்டப பூசைகளை தொடர்ந்து வல்லிபுர ஆழ்வார் உள்வீதி வலம் வந்து பூசைகள் நிறைவடைந்த பின்னர் சரியாக ட்டு மணிக்கு பொங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பொங்கல் விழாவில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ-02)





# இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான போதை பொருளுடன் பெண் கைது!

கொழும்பு, ஜன. 16

இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஹெரோய்னுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் ஹன்வெல்ல, தெனகமுவ பிரதேசத்தில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபரிடம் இருந்து 520 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 202 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள், இலத்திரனியல் தராசு மற்றும் மூன்று வங்கி புத்தகங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கட்டட திறப்பு விழா!

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் இளையதம்பி சபாலிங்கம் நினைவாக அமைக்கப்பட்ட மண்டப திறப்பு விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் கலாநிதி. சி. க. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய வங்கி கணக்காளர் சி. சிவகுமார், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# சிவபூமி மலையக ஆச்சிரம திறப்புவிழா!

கண்டி, ஜன. 16

சிவபூமி மலையக ஆச்சிரமம் நாளை மறுதினம் புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கலஹா, கண்டியில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு சிவபூதி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# ரியூனியன் தீவிலிருந்து 5 இலங்கையர் தப்பினர்!

பாரிஸ், ஜன. 116

ரியூனியன் தீவின் கில்லொட் விமான நிலையத்தில் வைத்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருந்த இலங்கையர்களில் ஐவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். பின்னர் அவர்கள் வெவ்வேறு இடங்களில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையில் இருந்து கடந்த ஆண்டு டிசெம்பர் 24 ஆம் திகதி படகு மூலம் ரியூனியன் தீவுக்கு வந்தடைந்த குடியேறிகள் 53 பேர் அடங்கிய தொகுதியினரில் ஐவரே கில்லொட் விமான நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து கடந்த திங்களன்று இவ்வாறு தப்பியோடி உள்ளனர்.

அவர்களோடு வேறு 16 பேரும் அங்கு தங்கவைக்கப்பட்டிருந்தனர். வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றில் அவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவிருந்தனர்.

35 - 40 வயதுகளுக்கு இடைப்பட்ட ஐந்து குடியேறிகளே தப்பியோடினர் என்றும் அவர்கள் ஐவரும் பின்னர் கடந்த புதனன்று தீவின் இரு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் எனவும் ரியூனியன் பொலிஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தப்பியோடுவதற்கு முன்னர் விமான நிலையத்தில் தங்கியிருந்த இடத்தில் அவர்களால் ஏற்படுத்தப்பட்டவை எனக் கூறப்படுகின்ற சேதங்களுக்காக அவர்கள் பொலிஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர் என்று ரியூனியன் செய்திச் சேவை ஒன்று தெரிவித்தது.

பிரான்ஸின் கடல் கடந்த நிர்வாகப் பிராந்தியமான ரியூனியன் தீவுக்கு இலங்கையில் இருந்து படகுகளில் குடியேறிகள் வருகை தருவது அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு முதல் இதுவரை சுமார் 400 பேர் இவ்வாறு படகுகளில் அங்கு வந்திருந்தனர். அவர்களில் சுமார் நாற்பது பேருக்கு மட்டுமே அங்கு புகலிடம் அனுமதிக்கப்பட்டது. ஏனையோர் கட்டம் கட்டமாக சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர். (ஐ)

# சுதந்திர கட்சியிலிருந்து பைசர் முஸ்தபா விலகல்!

கொழும்பு, ஜன. 16

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான பைசர் முஸ்தபா அந்த கட்சியில் இருந்து விலகியுள்ளார்.

தமது பதவி விலகல் கடிதத்தை கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்திருக்கிறார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியில் இருந்தும் கட்சியில் வகித்த பதவிகளில் இருந்தும் தாம் விலகியுள்ளார் என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
16.01.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு?

இலங்கை தமிழரசு கட்சி தனியாக தேர்தலை எதிர்கொள்ளும் முடிவை அறிவித்த பின்னணியில், அதுவரையில் இருந்த தமிழ்த் தேசிய அரசியல் சமநிலை குலைந்தது. பங்காளிக் கட்சிகள் தங்களுக்கான தனியான பாதையைத் தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. ஒன்றில் அவர்கள் தனியாகத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் அல்லது கூட்டாக பணியாற்ற வேண்டும். இந்த இரண்டு தெரிவுகள்தான் அவர்களுக்கு முன்னாலிருந்தன.

இந்த நிலையில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான டி. பி. எல். எவ். (புளொட்) மற்றும் ரெலோவுடன் ஈ. பி. ஆர். எல். எவ், சிறீகாந்தா - சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசிய கட்சி மற்றும், முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய கட்சிகள் ஒன்றாக இணைந்து தங்களை கூட்டமைப்பாக அறிவித்திருக்கின்றன. தொடர்ந்தும் தாங்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக இயங்கவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்திருக்கின்றனர். இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அவர்களின் அடையாளமாக பயன்படுத்த முடியாதென்று தமிழரசு கட்சி தெரிவித்திருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியல்ல. அதற்கு பிரத்தியேகமாக தமிழரசு கட்சி உரிமை கோரமுடியாது. தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்பகர்த்தாக்களில் ரெலோ மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகளும் இருக்கின்றன. அதேவேளை 2012இலிலிருந்து சித்தார்த்தன் தலைமையிலான டி. பி. எல். எவ். (புளொட்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியாக இயங்கிவருகின்றது. அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிழல் தலைமையாக செயல்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, புனர்வாழ்வு பெற்றவர்கள் தங்களை ஒரு கட்சியாக அணி திரட்டியிருக்கின்றனர். இந்தப் பின்னணியில் நோக்கினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பான்மை அவர்களிடம் இருக்கின்றது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கும் உரித்து தங்களுக்குண்டு என்பதே அவர்களின் வாதமாக இருக்கின்றது.

2009இல் யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து, தமிழ்த் தேசிய அரசியலின் அடையாளமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், கூட்டமைப்பாக இயங்கியபோதும், தமிழரசு கட்சியே தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. கூட்டமைப்பின் சார்பில் அனைத்து முடிவுகளும் சம்பந்தன் மற்றும் சுமந்திரனால்தான் முன்னெடுக்கப்பட்டன. இது ஊடகங்கள் அறிந்த விடயமும்கூட. இவ்வாறானதொரு சூழலில், தற்போது, தமிழரசு கட்சியும் கூட்டமைப்பின் பங்காளிகளாக இருந்தவர்களும் தனியாக இயங்கவுள்ள சூழலில் கூட்டமைப்பாக இயங்கும் விவகாரம் ஓர் அரசியல் பிரச்னையாக உருவெடுக்கலாம். தமிழரசு கட்சி இதனை தடுக்கும் வகையில் சட்டரீதியில் செயல்படுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிரந்தரமாக இல்லாமல்போகும் ஆபத்து உண்டு.

ஒரு வரலாற்று தொடர்ச்சியென்று நோக்கினால், ஏனையவர்கள் கூட்டமைப்பாக இயங்குவதை தமிழரசு கட்சி தடுக்க முற்படுவது சரியானதோர் அணுகுமுறையல்ல. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் காலத்தில் உருவாக்கப்பட்ட ஒன்று. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், கடந்த 22 வருடங்களாக தமிழ் மக்களை ஓர் அரசியல் திரட்சியாக கூட்டமைப்பே பிரதிநிதித்துவப் படுத்தியிருக்கின்றது. அதனை இல்லாமலாக்க வேண்டிய எந்தவொரு தேவையும் எழவில்லை. ஒருவேளை மக்களாக அதனை நிராகரித்திருந்தால் அது வேறு விடயம். ஆனால், அப்படி நிகழவில்லை. தவிர, தமிழரசு கட்சியால் தனித்து தேர்தலை எதிர்கொள்ள முடியுமென்று கருதினால், அதன் பின்னர் கூட்டமைப்பை மற்றவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதுமில்லை.

# பொலிஸாரின் ஒத்துழைப்புடன் போதை மருந்துகள் மீட்கப்பட்டன!

*வவுனியா, ஜன. 16*

வவுனியாவில் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி அரங்கன் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் பாவனை தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்திலும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது. மதுபான பாவனையைவிட மிகவும் மோசமாக வேறு விதமான போதைப் பொருள் பாவனை சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடத்தில் அதிகரித்துச் செல்கின்றது.

வலி நிவாரணி மாத்திரைகள் கூட அதிக விலைக்கு பெற்று போதைக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வவுனியா நகரப் பகுதியில் கடந்த காலங்களில் அவ்வாறான மாத்திரைகள் மீட்கப்பட்டன. வவுனியாவின் நெளுக்குளம், கூமாங்குளம், செக்கட்டிப்புலவு உள்ளிட்ட பல கிராமப் பகுதிகளிலும் போதை மாத்திரைகளுடன் சில இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைகளின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. ஆனால், பெற்றோர் தமது பிள்ளைகளின் நடத்தைகள், அவர்களின் நண்பர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், அளவுக்கு அதிகமாக பிள்ளைகளிடம் பணம் வழங்குவதையும் நிறுத்த வேண்டும். வீட்டில் சமைத்த உணவுகளை பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு கொடுத்து விடுங்கள்.

போதைப் பொருள் பாவனையை சுகாதாரத் துறையினரும், பொலிஸாரும் இணைந்து மட்டும் கட்டுப்படுத்த முடியாது. பெற்றோருடைய ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். எனவே பெற்றோர் மட்டுமன்றி சமூகமட்ட அமைப்புக்கள், பாடசாலைகள் என அனைவரும் போதைப் பொருள் பாவனை தொடர்பில் விழிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார்.

(ஐ)

# பூநகரியில் நெல் பயிர்கள் வறட்சியால் பெரும் அழிவு

*கிளிநொச்சி, ஜன. 16*

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் நிலவும் வறட்சி காரணமாக பெருமளவான நெல் பயிர்கள் அழிவடைந்துள்ளன என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் பருவ மழையை நம்பிய வகையிலேயே பெரும் போகச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், பெரும் போக செய்கையானது மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக நெல் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

பூநகரி செயலக பிரிவின் வாடியடி, கறுக்காய் தீவு, ஞானிமடம், செல்விபுரம் கரியாலை நாகபடுவான், கொல்லக்குறிச்சி, நல்லூர் போன்ற பகுதிகளில் கூடுதலான நெல் பயிர்கள் வறட்சி காரணமாக அழிவடைந்துள்ளன.



இந்தப் பகுதிகளில் பெருந்தொகை நிதியை செலவு செய்து காலபோக நெல் செய்கை மேற்கொண்டுள்ள நிலையில் தற்போதைய வறட்சியால் நெல் பயிர்கள் அழிவடைந்துள்ளன. வறட்சி காரணமாக இதுவரை 30 வீதத்துக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாய அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ஐ)

# சுற்றுலா பயணிகளுக்கான கட்டுபாட்டு விதிகள் நீக்கம்!


*கொழும்பு, ஜன. 16*

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் பின்பற்ற வேண்டிய விடயங்களை உள்ளடக்கி ஏற்கனவே வெளியிடப்பட்ட கோவிட் - 19 வழி காட்டல்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்படுவதற்கு முன்பாகவே குறிப்பிடத்தக்களவிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை முன்னெடுத்திருப்பதன் காரணமாகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை விளக்கமளித்துள்ளது.

மேலும் கோவிட் - 19 வைரஸ் பரவல் தொடர்பில் சுகாதாரத் தரப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய மீளாய்வுக் கூட்டமொன்று 17 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதனைத்தொடர்ந்து புதிய வழிகாட்டல்கள் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 16 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - தை 02
நல்ல நேரம் : 6.30 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.30
திதி : பிரதமை

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உங்கள் செயல்களில் இன்று ஆதாய நிலை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு நல்ல செய்தி வந்து உங்களை மகிழ்விக்கும். புதிய முயற்சி வெற்றியாகும்.

**இடபம்**
நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் இன்று உங்களை வந்து சேரும். செயல்கள் லாபமாகும். தடைகளை எல்லாம் சரி செய்வீர்கள். முயற்சியால் முன்னேற்றம் காண்பீர்கள். விலகி சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள்.

**மிதுனம்**
கோயில் வழிபாடு மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த வருவாய் வரும். புதிய முயற்சி லாபமாகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்**
மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் உண்டாகும். துணிச்சலுடன் செயல்படுவீர்கள். நெருக்கடிகளை சமாளித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். விருந்தினர் வருகை மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்**
நீங்கள் எதிர்பார்த்த வரவு வந்து சேரும். லாபமான நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும். பழைய பிரச்னைகளை சரி செய்வீர்கள். புதிய முயற்சியில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். உங்கள் திறமை வெளிப்படும்.

**கன்னி**
வரவுகளில் இருந்த தடைகள் அகலும். குடும்பத்தில் உற்சாகம் அதிகரிக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். வெளி வட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும்.

**துலாம்**
கடவுள் வழிபாட்டில் மனம் செல்லும். நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். குடும்பத்தின் நலனுக்காக ஒரு முடிவை துணிச்சலுடன் மேற்கொள்வீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத செலவுகளும் அலைச்சலும் உண்டாகும். கோயில் வழிபாடு மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத் துணையுடன் உண்டான பிரச்னைகள் விலகி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு**
நிதி நிலையில் இருந்த சங்கடங்கள் தீரும். திடீர் வரவால் மகிழ்வீர்கள். நன்மையான நாள். திட்டமிட்டு செயல்பட்டு உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்**
தொழிலில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்து லாபம் காண்பீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். போட்டியாளர்கள் விலகிச் செல்வர். பொருளாதார நிலை உயரும். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கும்பம்**
நண்பர்களின் ஆதரவுடன் உங்கள் முயற்சி இன்று நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நீங்கள் எதிர்பார்த்திருந்த ஒரு செய்தி வந்து சேரும். வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
உங்கள் பேச்சிலும் செயலிலும் கவனம் தேவைப்படும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உங்கள் மனம் நினைப்பதை உங்களால் செயல்படுத்த முடியாமல் போகும். குழப்பம் அதிகரிக்கும்.



தைப்பொங்கல் திருநாளான நேற்று உலகப் புகழ்பெற்ற மதுரை – அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி....!

# தமிழர் திருநாளான பொங்கல் தமிழ்நாட்டில் கொண்டாட்டம்

*சென்னை, ஜன. 16*

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை தமிழ்நாடு முழுவதும் உயிரோட்டமாகவும், மண் மணத்தோடும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.

அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக விளங் கும் சூரியனுக்கும், இயற்கைக்கும் உழவுக்கும், நன்றி தெரிவிக்கும் விழாவாக தை மாதம் முதல் நாளான நேற்று பொங்கல் பண்டிகை தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அதிகாலையில் இருந்தே மக்கள் அனைவரும் எல்லாம் புதுமை எதிலும் புதுமை பொங்கும் விதமாக புத்தாடை அணிந்து, வீடுகளில் வண்ண கோலமிட்டு, செம்மண் தீட்டிய தம் இல்லத்தின் வாசலில் பிள்ளையார் பிடித்து வைத்து விளக்கேற்றி வைத்து புதிய பொங்கல் பானைக்கு புதிய மஞ்சளை கொம்பு செடியை புதிய நூலில் காப்பாக கட்டி, குங்குமம் வைத்து, மங்களகரமாக புதிய நெல் குத்தியெடுத்த புத்தரிசியில் பொங்கலிட்டு கதிரவனை வழிபட்டு உற்சாகமாக கொண்டாடினர். பொங்கல் பொங்கி வரும் போது குடும்பத்து டன் “பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல்” என கூறி ஆரவாரித்து மகிழ்ச்சி அடைந்தனர்.

தமிழ்நாடு மட்டுமின்றி நாடு முழுவதிலும் உள்ள தமிழர்கள், வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் தங்கள் பாரம்பரிய வழக்கம் மாறாமல், உயிரோட்டமாகவும், மண் மணத்தோடும் வீடுகளில் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர்.

பொங்கல் பண்டிகையையொட்டி தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. (ஐ)

# மத்திய அரசாங்கத்துக்கு ஆளுநர் விளக்கக் கடிதம் அனுப்பினார்!

*சென்னை, ஜன. 16*

தமிழக சட்டப்பேரவை நிகழ்வு குறித்து ஆளுநர் ஆர். என். ரவி குடியரசுத் தலைவருக்கும் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கும் அறிக்கை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழக சட்டப்பேரவையில் தமிழக ஆளுநர் ரவி கடந்த 9ஆம் திகதி உரையாற்றினார். தமிழக அரசு தயாரித்த உரையின் சில வரிகளை ஆளுநர் தவிர்த்து உரையாற்றியதாக பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டதால் அவர் பேரவையிலிருந்து வெளியேறினார். இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி தலைமையில் குடியரசுத் தலைவரை சந்தித்து மனுவும் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், தமிழக ஆளுநர் ஆர். என். ரவி, குடியரசு தலைவர், உள்துறை அமைச்சகத்திற்கு சட்டப்பேரவை நிகழ்வு குறித்து விளக்கிக் கடிதம் அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது. உரையின் சில வரிகளை படிக்க தவிர்த்ததற்கான காரணங்கள் அதில் விளக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சில தலைவர்களது பெயரை ஆளுநர் படிக்கவில்லை என்றும், தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு குறித்து தெரிவிக்கப்பட்டது உள்ளிட்டவை தவிர்க்கப்பட்டதாக அவர் மீது சர்ச்சை எழுப்பப்பட்டது. இவற்றைத் தவிர்த்ததற்கான காரணங்களை தனது கடிதத்தில் ஆளுநர் விளக்கம் அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. பொதுவாக மாநிலத்தில் மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநர்கள் தேவைப்பட்ட சமயங்களிலும் வாரம், மாதந்தோறும் மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்புவதும் வழக்கமாகும்.

இதனிடையே வெள்ளிக் கிழமை தனது குடும்பத்தினருடன் டில்லி சென்ற தமிழக ஆளுநர் ரவி, அன்று மாலையில் குருகிராமத்தில் தனக்கு நெருக்கமானவர்களின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். டில்லி தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்த ஆளுநர், சனிக்கிழமை மாலை விமானம் மூலம் சென்னை திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒரே நாடு ஒரே தேர்தல் முறைக்கு ஆதரவு தெரிவித்தது அ. தி. மு. க.!

*சென்னை, ஜன. 16*

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ முறைக்கு ஆதரவு தெரிவித்து மத்திய சட்ட ஆணையத்துக்கு அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமி கடிதம் எழுதியுள்ளார்.

மக்களவை தேர்தலையும், சட்டப்பேரவைத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துவது குறித்து மத்திய சட்ட ஆணையம் இந்தியா முழுவதும் உள்ள அரசியல் கட்சிகளிடம் கருத்து கேட்டு வருகிறது. கருத்துகளை தெரிவிக்க இன்றைய தினமே இறுதிநாளாகும்.

அ. தி. மு. கவுக்கான கடிதத்தை எடப்பாடி பழனிசாமிக்கு அந்தக் கட்சியின் இடைக்கால பொதுச் செயலர் எனக் குறிப்பிட்டு, மத்திய சட்ட ஆணையம் கடிதம் எழுதியிருந்தது.

மத்திய சட்ட ஆணையத்துக்கு எடப்பாடி பழனிசாமி பதில் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலோடு, தமிழகத்துக்கு சட்டப்பேரவைத் தேர்தலும் வரும் என்று எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து பேசி வருகிறார். அதன் தொடர்ச்சியாக ஒரே நாடு ஒரே தேர்தல் முறைக்கு அவர் ஆதரவு தெரிவித்துள்ளார். (ஐ)

# கதக் போட்டியில் வென்ற மாணவர்கள் கௌரவிப்பு







யாழ்ப்பாணம், ஜன. 16

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட அழகியல் கதக் போட்டியில் சாதனை படைத்த தெல்லிப்பழை கோட்டக் கல்வி மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஏ. வி. ஆர். தொண்டு நிதியத்தின் ஏற்பாட்டில், இந்த கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலர், தெல்லிப்பழை பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, வலிகாமம் வலயத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசர் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# தமிழ்த் தேசிய கட்சிகளுடன் ஒன்றாகவே பயணிப்போம்!

## தமிழரசு கட்சியின் தலைவர்



யாழ்ப்பாணம், ஜன. 16

**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் புதிய கூட்டணிகள் உருவானாலும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளுடன் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாக தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளாக இருந்த ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் மேலும் மூன்று கட்சிகளை இணைத்துக் கொண்டு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரில் போட்டியிடவுள்ளது தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியப் பரப்பில் பயணிக்கின்ற தேசியம் சார்ந்த கட்சிகள் தமிழ் மக்களுடைய அரசியல்தீர்வு தொடர்பில் இணைந்து பணியாற்றுகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் மத்திய குழுவில் தீர்மானிக்கப்பட்டது யாவரும் அறிந்தது.

இந்தத் தீர்மானத்தை எடுத்ததால் நாங்கள் சக கட்சிகளுடனோ அல்லது அவர்கள் எங்களுடனோ இணைந்து பணியாற்றாமல் விடுவதென்று அர்த்தம் அல்ல. நாங்கள் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிகளுடன் இந்த முடிவை எடுத்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஒன்றாகவே சென்று சந்தித்தோம். அதுமட்டும் அல்லாது தமிழ் மக்களுடைய நீண்டகால அரசியல் பிரச்னையை தீர்ப்பதற்கு சக தமிழ் கட்சிகளுடன் நாங்கள் அனைவரும் ஒன்றாகவே பயணித்திருக்கிறோம்.

ஆகவே, தற்போதைய நிலைப்பாட்டில் தமிழரசு கட்சி தனியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் அதன் பெறுபேறுகள் அடுத்த கட்டத்துக்கு எம்மை இட்டுச் செல்லும்.

ஆகவே, கூட்டணிகள் புதிதாக இணைக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

# அநாதரவாக நின்ற மோ. சைக்கிள் அச்சுவேலி பொலிஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 16

அச்சுவேலியில் அநாதரவாக நின்ற மோட்டார் சைக்கிளொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி பிரதான வீதியிலுள்ள கூட்டுறவு கிராமிய வங்கி முன்பாக நேற்றுமுன்தினம் இரவு முதல் அந்தப் பகுதியில் மோட்டார் சைக்கிள் அநாதரவாக நின்றிருந்தது.

இதனால், சந்தேகமடைந்த அப்பகுதி மக்கள் நேற்றுக் காலை அச்சுவேலிப் பொலிஸாருக்கு தகவலளித்தனர்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிள் உரிமை கோரப்படாத சாவியுடன் அச்சுவேலிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. (ஐ)

# வாள்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 16

இரண்டு வாள்களுடன் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் - ஏழாலை தெற்கு மயிலாங்காட்டை சேர்ந்த 43 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-03)

# தீர்வை வழங்காமல் இழுத்தடித்தால் இளைஞர்கள் மீண்டும் போராடலாம்!

## முன்னாள் எம். பி. சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜன. 16

தமிழர்களுக்கான நிரந்தர தீர்வை வழங்காது இந்த அரசு காலம் தாமதித்தால் மீண்டும் இளைஞர்கள் போராடக்கூடும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அராலியில் பொதுமக்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கிய நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு அனைத்து ஜனாதிபதிகளும் வந்து சென்று விட்டார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் காலம் முதல் காணிகள் விடுவிப்பு அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக உடனடியாக தீர்வு தருகின்றோம் என சொல்லத் தொடங்கினார்கள். நல்லாட்சி காலத்தில் ஜனாதிபதியாக வந்த போது நாங்கள் தமிழர்களினுடைய நிரந்தர தீர்வுகள் உட்பட தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் அனைத்தும் உடனடியாக தீர்க்கப்படும் என்று நமக்கு வாக்குறுதி அளித்தார்கள். இப்போது ஜனாதிபதியாக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்க அந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக செயல்பட்டார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாதிபதி ரணில் ஒன்றை மட்டும் விளங்க வேண்டும். நாங்கள் பல தடவைகள் இது தொடர்பாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டு ஏமாற்றப்பட்டு விட்டோம். எங்களுடைய அதிகார பகிர்வு அதிகார பங்கீடு தொடர்பாக நாங்கள் பல வருடங்களாக பேசுகிறோம். இந்தக் கதைகள் பழங்கதைகளாகி கிட்டத்தட்ட 70, 75 வருடங்கள் ஆகிவிட்டன.

ஜனாதிபதி அவர்களே, எவ்வளவு காலம் எங்கள் தமிழ் மக்களை நீங்கள் ஏமாற்ற முடியும் எங்களின் தமிழ் இளைஞர்கள் வெகுண்டு எழுந்தார்கள் உங்களுடைய ஏமாற்று வித்தைகளை கையாண்டு நீங்கள் பல சந்தர்ப்பங்களை பாவித்து மௌனிக்க பண்ணினீர்கள். எதிர்வருகின்ற இரண்டு வருடத்தையும் இந்த ஜனாதிபதி எப்படியாவது தமிழர்களை ஏமாற்றி கொண்டு நடத்தி விடுவார். தமிழர்களும் ஏதோ ஒரு விதப்பட்டு ஏமாற்றத்துக்குள் அகப்பட்டு விடுவோம். ஆனால், தமிழர்கள் ஏமாற்றப்படக்கூடாது என்பதற்காக ஒருவர் 30 வருடங்களாக தமிழ் மக்களின் உரிமையை மீட்டெடுப்பதற்காக போராடினார். அதனுடன், இணைந்து எத்தனையோ மக்கள் அதனுடன் இணைந்து எத்தனை மக்கள் உயிரை நீத்திருக்கின்றார்கள்.

போராட்டம் தொடங்குகின்றபோது நாங்கள் இளைஞர்கள் இப்போது எங்கள் பிள்ளைகளாக இருக்கக்கூடிய இளைஞர்கள் மீண்டும் போராட்டத்தை தொடங்குவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை - என்றார். (ஐ)

# சி. ஐ. டி என்றுகூறி மக்களிடம் பணம் மோசடி செய்தவர் கைது!

வவுனியா, ஜன. 16

பொலிஸ் சி.ஐ.டி என தன்னை அறிமுகப்படுத்தி பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பெற்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கூமாங்குளத்தில் வீடு ஒன்றுக்கு சென்ற நபரொருவர் குறித்த வீட்டில் உள்ள மகன் தொடர்பாக மகனின் தயாரிடம் தெரியப்படுத்தி தன்னை சி. ஐ. டி. என அறிமுகப்படுத்தியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக அவர்களுடன் பேசி மகனை வைத்து பணம் பெற்றுள்ளதுடன், பொலிஸில் இருந்து தனக்கு கிடைத்த யூரியா பசளை தருவதாகவும் கூறி பணம் பெற்றுள்ளார்.

இந்நிலையில், பசளையும் வழங்காது தொலைபேசி அழைப்பை ஏற்க மறுத்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் பாதிக்கப்பட்டவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பணம் பெற்ற குறித்த நபர் சி. ஐ. டி. இல்லை என்பதை உறுதிப்படுத்தியதுடன், அவரை கைது செய்தனர்.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்படவராவார்.

மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கோவிட் தொற்று பரவல் அபாயம் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்!

## மக்களை எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜன. 16

**கோவிட் தொற்றுப் பரவும் அபாய நிலை இருக்கிறது. எனவே, பொது மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.**

கோவிட் நோய்த் தொற்று குறித்த பிரதான இணைப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி இந்த எச்சரிக்கையை வழங்கியுள்ளார்.

சீனா உள்ளிட்ட சில நாடுகளில் கோவிட் தொற்று தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது. கோவிட் காரணமாக இரண்டு ஆண்டுகள் பாதிப்புக்களை எதிர்நோக்கியதனை மக்கள் மறந்து விட்டார்கள்.

ஒரு மீற்றர் இடைவெளி, கை சுத்திகரிப்பான் பயன்டுத்தல், அடிக்கடி கை கழுவுதல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார பழக்க வழக்கங்களை பலர் மறந்து விட்டார்கள்.

சுகாதார பழக்க வழக்கங்களை கைவிடுவதனால் மீளவும் நோய்த் தொற்று பரவும் அபாயம் காணப்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## போதை ஊட்டும் மருந்துகளை முறையற்று விற்பது குற்றமாகும்!

### வவுனியா சுகாதாரப் பிரிவு

வவுனியா, ஜன. 16

வவுனியாவில் சில மருந்தகங்களில் போதை மருந்து கொள்வனவு பெருங்குற்றமாகும். தேவையேற்படின் பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள தனியார் மருந்தகங்களில் போதையை ஏற்படுத்தும் மருந்து விற்பனை தொடர்பில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் நிலக்சன், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி யூட் பிரீஸ் , வவுனியா மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரிகளான பிரசன்னா மற்றும் அரங்கன் , உணவு மருந்து பரிசோதகர் , வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஆகியோர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ஓர் மருத்துமவமனையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அங்கு குறித்த (போதையை ஏற்படுத்தக்கூடிய) மருந்துகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், தவறான முறையில் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளமையும் உறுதி செய்யப்பட்டமையுடன் குறித்த வைத்திய நிலையத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு அருகாமையில் ஓர் தனியார் மருந்தகத்தில் 2022 ஜனவரி - ஒக்ரோபர் வரையான காலப் பகுதியில் 1220 பெட்டிகள் போதையை ஏற்படுத்தும் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டமை தெரிய வந்துள்ளது.

மருந்து கொள்வனவுக்குரிய பற்றுச்சீட்டுக்கான காசோலையை குறித்த தனியார் மருந்தகத்தின் இயக்குநரான அரச மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் அவரின் கையொப்பத்துடன் வழங்கியுள்ளமையும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இவ்வாறு பெறப்பட்ட 42 ஆயிரத்து 700 மருந்துகள் எங்கு சட்ட ரீதியற்ற முறையில் விநியோகப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதுடன், இவ்விடயம் தொடர்பாக திணைக்களத்தால் பூர்வாங்க விசாரணைகள் செய்யப்படல் வேண்டும். இது ஒரு பெருங் குற்றம் என்பதுடன் தேவையேற்படின் பொலிஸ் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப் பொருட்களுடன் மன்னார் இளைஞர் கைது!

கண்டி, ஜன. 16

கண்டியில் 17 வயதுடைய இளைஞர் ஒருவர் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், கடந்த 13ஆம் திகதி மன்னார் பேசாலையைச் சேர்ந்த இளைஞன் 15 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப் பட்டாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நகரில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடந்து கொண்டபோது, அவரது அடையாளத்தை உறுதிப் படுத்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் அடையாள அட்டையைக் கேட்டுள்ளனர். ஆனால், அப்போது அவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எதுவும் அவரிடம் இல்லை. அவரை சோதனையிட்டபோது அவரது கால்சட்டை பாக்கெட்டில் ஐஸ் போதைப்பொருட்கள் இருப்பது தெரியவந்தது.

கண்டி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)





ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய வளாகத்தில் நேற்று காலை தைப்பொங்கல் திருப்பலி வண. பிதா ஜெயரஞ்சன் அடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட போது...!

## பாதுகாப்பு செயலராக மகேஸ் சேனநாயக்க?

கொழும்பு, ஜன. 16

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்னவை நீக்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகைப் போராட்டத்தின் போது, அலரிமாளிகை உள்ளிட்ட முக்கிய அரச சொத்துகளுக்குள் போராட்டக்காரர்கள் அத்துமீறி நுழைவதைத் தடுக்க, படையினரை உரிய முறையில் வழிநடத்தத் தவறினார் என்ற குற்றச்சாட்டிலேயே பாதுகாப்புச் செயலாளர் நீக்கப்படவுள்ளார்.

இதன்படி, புதிய பாதுகாப்பு செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் ருவான் விஜயவர்தனவால் இந்த யோசனை ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## அமைச்சரவையில் மாற்றமில்லை! பெண் உட்பட இருவருக்கு அமைச்சு!!

கொழும்பு, ஜன. 16

அமைச்சரவையில் முன்னர் திட்டமிட்டபடி எவ்வித மாற்றமும் நடக்காது என அரசாங்க வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு பதிலாக இரண்டு பேருக்கு அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்குவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நியமனம் நாட்டின் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் பெண் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சு பதவி கிடைக்கும் என்றும் அரசாங்க வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாகாணங்களுக்கு புதிதாக ஆளுநர்களும் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.


## காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது. 2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அததோனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசாரணா: ஈழநாடு


## பொரளை தேவாலய சமூகத்தினர் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்!

கொழும்பு, ஜன. 16

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டு ஒரு வருடத்தை எட்டியுள்ளது. இந்தநிலையில், அது தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவித்து நேற்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



கொழும்பு - பொரளை அனைத்து புனிதர் தேவாலயத்தின் அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் மற்றும் பங்குக்கு உரிய மக்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கைக்குண்டு வைக்கப்பட்டத்தின் பின்னணியில் உள்ளவர்கள் யார், விசாரணைகள் துரிதப்படுத்தப்படாமைக்கு காரணம் என்ன? என்று எழுதப்பட்ட வாசகங்கள் பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# பெரமுன - ஐ. தே. க. கூட்டணி இந்த வாரம் அறிவிக்கப்படும்!

## சாகர காரியவசம் எம். பி.

கொழும்பு, ஜன. 16

**சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான புதிய அரசியல் கூட்டணி தொடர்பாக உத்தியோகபூர்வமாக இந்த வாரம் அறிவிக்கப்படும்.**

**தேர்தல் பிரசார நடவடிக் கையில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நேரடியாக களமிறங்குவார் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**



புதிய அரசியல் கூட்டணி தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சு பதவிகளை வகித்து முழு அரச வரபிரசாதங்களையும் அனுபவித்தவர்கள் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளானபோது அரசாங்கத்தில் இருந்து வெளியேறியவர்கள் ஹெலிகொப்டர் சின்னத்தில் புதிதாக அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளார்கள்.

இடை நடுவில் உடைந்து விழும் ஹெலிகொடரில் மக்கள் பயணம் செய்யமாட்டார்கள். சந்தர்ப்பவாதிகள் ஒன்றிணைந்து சுதந்திர மக்கள் சபை என்பதை உருவாக்கியுள்ளார்கள். தேவைக்கு ஏற்ப அரசியல் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் தரப்பினருக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் ரீதியில் பெரிய வேறுபாடுகள் காணப்பட்டாலும் நாட்டுக்காக ஒன்றிணைந்துள்ளோம்.

நெருக்கடியான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பொறுப்பேற்றார். கட்சி என்ற ரீதியில் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிட தீர்மானித்துள்ளோம். கூட்டணி தொடர்பில் கடந்த வாரம் தீர்க்கமான பேச்சு இடம்பெற்றது. ஒருசில முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளோம். ஒருசில மாவட்டங்களில் கூட்டணியாகவும், ஒருசில மாவட்டங்களில் தனித்தும் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கூட்டணி தொடர்பில் உத்தி யோகபூர்வ தீர்மானம் இந்த வாரம் வெளியிடப்படும் - என்றார்.

## புனர்வாழ்வு பணியகச் சட்டம் மீது புதனன்று பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, ஜன. 16

புனர்வாழ்வு பணியக சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர் பிரதிநிதித்துவம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட தனிநபர் பிரேரணைகள் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நிலையியல் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 5 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2301.12 மற்றும் 2308.26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியால் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள், வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் 2308.51 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் ஆகியன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனை தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் முன்வைத்த உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த) சட்டமூல தனி நபர் பிரேரணை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்த முன்வைத்த உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டு சட்டவாக்க நிலையியல் குழுவுக்கு முன்வைக்கப்படவுள்ளது.

இதனை தொடர்ந்து மாலை 5 மணிமுதல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வுப் பணியகம் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தை எதிர்வரும் புதன்கிழமை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 19 ஆம் திகதி தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

## ஐ. தே. கவின் பணிமனைமீது பெற்றோல் குண்டு தாக்குதல்!

கொழும்பு, ஜன. 16

ஐக்கிய தேசியக் கட்சியின் பணிமனை மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வாரியபொல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குருநாகல் - வாரியபொல - திகிதவ பிரதேசத்திலுள்ள பணிமனையின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உருவம் பொறிக்கப்பட்ட பதாகை சேதமடைந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் குழுவொன்று இந்த சம்பவத்துடன் தொடர்புப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் வாரியபொல தொகுதி பிரதம அமைப்பாளர் தனுஷ்க பாலசூரிய தெரிவித்தார்.

இந்தப் பணிமனையை அகற்றுமாறு நேற்று முன்தினம் வந்த சிலர் அச்சுறுத்தல் விடுத்தனர் என்றும் அவர் கூறினார்.

## மகாவலி ஆற்றில் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன. 16

மகாவலி ஆற்றில் நேற்று முன்தினம் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடரத்வத்த மாவத்தைப் பகுதியில் மீட்கப்பட்ட இந்த சடலத்துக்கு உரியவர் 50 முதல் 65 வயதுக்கு இடைப்பட்ட ஆண் எனவும், சடலம் முற்றாக சிதைவடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கண்டி மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## நெல் பயிரில் பரவுகிறது நோய்!

கொழும்பு, ஜன. 16

நெற்செய்கையில் பரவும் மஞ்சள் புள்ளி நோய், நாடளாவிய ரீதியில் பரவியுள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த நோய் பரவியுள்ளதாகவும் விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## பாடசாலையில் மாணவரை சேர்க்க பலரிடம் பணம்பெற்ற பெண் கைது!

கொழும்பு, ஜன. 16

கம்பஹா மாவட்டத்தின் முன்னணி பாடசாலை ஒன்றில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக பல இலட்சம் ரூபாய் பணத்தை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் தொடர்பில் 5 பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று யக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

யக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதான அந்தப் பெண்ணுக்கு பணம் வழங்கிய பலர் கம்பஹா தலைமையக பொலிஸில் மற்றும் யக்கல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்றவர்களை இலக்கு வைத்து சந்தேக நபரான பெண் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கம்பஹா பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ரோஹனவின் பணிப்புரைக் கமைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் அத்துகோரளவின் மேற்பார்வையில் பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

## நல்லை ஆதினம், யாழ். ஆயரை சந்தித்து ஜனாதிபதி ஆசி பெற்றார்!

யாழ்ப்பாணம், ஜன. 16

தேசிய பொங்கல் கொண்டாட்டத்துக்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் மதத் தலைவர்களை சந்தித்தார்.

நல்லை ஆதின குருமுதல்வர் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்ற அவர், யாழ். மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் சந்தித்து ஆசி பெற்றார்.

அத்துடன், யாழ். நகரிலுள்ள நாக விகாரைக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அவருடன், உயர் கல்வி இராஜாங்க அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், கடற்தொழில் அமைச்சர் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர். (ஐ)

## அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான கால எல்லை நிறைவு!

கொழும்பு, ஜன. 16

உள்ளூராட்சி தேர்தலுக்கான அரசியல் கட்சிகளின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை நியமிப்பதற்கான கால எல்லை நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்தது.

அரசியல் கட்சிகள் அந்தந்த கட்சிகளின் நியமனங்கள் உள்ளிட்ட விடயங்களுக்கான அதிகாரி தொடர்பான விவரங்களை தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்புவது வழக்கமான நடைமுறையாகும்.

இதனிடையே இருபதுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் காவல் பணியில் பொலிஸாரை ஈடுபடுத்துவதில் சிக்கல்!

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு கடமைகளுக்காக வழங்க வேண்டிய தொகை இதுவரை வழங்கப்படவில்லை என பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் கடமைகளுக்காக பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய பணம் இதுவரை கிடைக்கப்பெறாதமையால் பொலிஸ் திணைக் களம் நிதிப் பிரச்னையில் சிக்கியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

அத்தோடு, நிலுவைத் தொகையை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தல் பணிகளை ஆரம்பிக்கும் முன்னர் கடந்த பொதுத் தேர்தலுக்கான பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது கீழ் மட்டத் தேர்தல் என்பதால் பல்வேறு குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டால் விசேட அதிரடிப் படையினரை வரவழைக்க வேண்டும். கட்டுப்படுத்த முடியாவிட்டால் இராணுவத்தினரைக் கூட வரவழைக்க வேண்டிய நிலை ஏற்படும்.

அதுமட்டுமல்லாமல், தேர்தலின்போது பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்டவிரோத விளம்பர பதாகைகளை அகற்றும் பணியை கூலித் தொழிலாளர்கள் செய்கின்றனர். அவற்றுக்கான கட்டணம் முதலில் பொலிஸாரிடமிருந்தும் பின்னர் தேர்தல் ஆணையத்திடம் இருந்தும் வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

# ஜல்லிக்கட்டு: வெற்றியாளர் அறிவிக்கப்படுவது எப்படி? பரிசுகள் என்ன?

## சுவாரஸ்ய வரலாறு



சிவகுமார் இராஜகுலம்



ஜல்லிக்கட்டு தமிழரின் வீர விளையாட்டு என்று வர்ணிக்கப்பட்டாலும், அண்மைக் காலமாக அதில் வழங்கப்படும் பரிசுப் பொருட்கள் மிகுந்த கவனம் பெறுகின்றன. கார், பைக், வீட்டு உபயோகப் பொருட்கள் என்று பரிசுகள் வாரி வழங்கப்படுகின்றன.

ஜல்லிக்கட்டு தொடங்கியது முதல் அதில் வழங்கப்படும் பரிசுகள் பரிணாம வளர்ச்சி பெற்றது எப்படி என்ற வரலாறு சுவாரஸ்யமானது.

ஜல்லிக்கட்டு, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாக தொன்று தொட்டு விளையாடப்பட்டு வருகிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஜல்லிக்கட்டு விளையாட்டு வழக்கில் இருந்ததாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்து 35 கிமீ தொலைவில் உள்ள கல்லூட்டு மேட்டுப்பட்டி, நீலகிரி மாவட்டம் கரிக்கியூர் உள்ளிட்ட இடங்களில் அதனை நிரூபிக்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

சீறி வரும் காளையின் திமிலைப் பற்றிய படி, குறிப்பிட்ட தொலைவை கடப்பவர் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார் என்பதால் இந்த விளையாட்டை ஏறு தழுவல் என்றே பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. பல இடங்களில் காளைகளின் கொம்புகளில் 'சல்லிக் காசு' என்னும் அன்றைய நாணயங்களைத் துணியில் வைத்து கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அடக்கும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும்.

கொம்பில் சல்லிக்காசு வைத்துக் கட்டப்படுவதன் அடிப்படையில் இந்த விளையாட்டு சல்லிக்கட்டு என்று அழைக்கப்பட்டது. அதுவே பின்னாளில் மருவி ஜல்லிக்கட்டு என்றாகிப் போனதாக தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுதந்திரத்திற்குப் பின்னரும் கூட, காளையின் கொம்பில் சல்லிக்காசுகளை வைத்துக் கட்டும் வழக்கம் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் சல்லிக்காசுகள் செல்லாதவையாகிப் போனதால், காளைகளை வெல்வோருக்கும், அடங்காத காளைகளுக்கும் வேறு வகை பரிசுகளை வழங்கும் பழக்கம் தொடங்கியது.

ஆரவாரமான ஜல்லிக்கட்டுக்கு தனது வார்த்தை ஜாலத்தால் மேலும் சுவாரஸ்யம் சேர்க்கும் மைக் சரவணனிடம், ஜல்லிக்கட்டு பரிசு குறித்து கேட்டோம்.

அவர் பதிலளிக்கையில், "40 ஆண்டுகளுக்கு முன்பு கூட ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்கிய இளைஞர்களுக்கும், அடங்காத காளைகளின் உரிமையாளர்களுக்கும் வேட்டி-சட்டை, துண்டு என்கிற அளவிலேயே பரிசுகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. 1990-களில் டிபன் பாக்ஸ், வீட்டில் அன்றாட பயன்பாட்டிற்கான எவர் சில்வர் பாத்திரங்கள், வெண்கலம் மற்றும் பித்தளைப் பாத்திரங்கள் பரிசாக வழங்கப்பட்டுள்ளன," என்றார்.

மேலும் அவர், "அதன் தொடர்ச்சியாக, ஜல்லிக்கட்டில் வெற்றிப் பெறும் வீரர்கள் அல்லது காளைகளுக்கு பைக், தங்க நாணயம், மொபைல் போன், பீரோ, கட்டில், மெத்தை, பணம் ஆகியவை பரிசாக அளிக்கப்பட்டன. இளவட்டக்கல்லை தூக்கினால்தான் திருமணம் என்பதைப் போல, ஜல்லிக்கட்டு காளைகளை அடக்குவோருக்கு பெண் கொடுக்கும் வழக்கமும் இருந்தது" என்றும் கூறினார்.



2017-ம் ஆண்டில் பீட்டா அமைப்பு தொடர்ந்த வழக்கில் ஜல்லிக்கட்டு தடைபட, ஒட்டுமொத்த தமிழ்நாடும் கொதித்தெழுந்தது. இதன் விளைவாக, தமிழ்நாடெங்கும் ஜல்லிக்கட்டு நடத்தும் உரிமை மீட்டெடுக்கப்பட்டது. தேச எல்லை கடந்து உலகத்தின் கவனமும் ஜல்லிக்கட்டு மீது விழுந்தது. குறிப்பாக, அலங்காநல்லூரைத் தாண்டி அவனியாபுரம், பாலமேடு ஜல்லிக்கட்டுகளும் உலகின் கவனத்தை ஈர்த்தன.

உலகமே உற்றுநோக்கும் ஒன்றாக மாறிவிட்ட பிறகு இந்திய அரசியல் தலைவர்களும், பிரபலங்களும் ஜல்லிக்கட்டுடன் ஏதாவது ஒரு வகையில் தங்களை இணைத்து அடையாளப்படுத்தத் தொடங்கிவிட்டனர். 2021-ம் ஆண்டு அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில் அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.

அதே ஆண்டு அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி, திமுக இளைஞரணித் தலைவரும், தற்போதைய அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஒரே மேடையில் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு மட்டுமல்லாது, தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடத்தப்படும் ஜல்லிக்கட்டுகளில் அந்தந்த பகுதி அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் பங்கெடுப்பது எழுதப்படாத விதியாகவே ஆகிப் போனது.

வெளிநாட்டினர், அரசியல் தலைவர்கள், பிரபலங்களின் கவனம் பெற்ற பிறகு ஜல்லிக்கட்டிற்கு ஸ்பான்சர்கள் குவியத் தொடங்கிவிட்டன. இதனால், விலை மதிப்பு மிக்க பரிசுகளை வழங்குவது சாதாரணமாகி விட்டது. குறிப்பாக, அலங்காநல்லூர், அவனியாபுரம் ஜல்லிக்கட்டுகளில் முதல் பரிசாக கார் வழங்கப்படுவது வழக்கமான ஒன்றாகிவிட்டது.

"ஜல்லிக்கட்டில் இன்று விலை மதிப்பு மிக்க கார்கள் போன்ற பரிசுகள் வழங்கப்பட்டாலும், வீரர்கள் மற்றும் காளை வளர்ப்பாளர்களின் குறிக்கோள் அதுவல்ல" என்கிறார் ஜல்லிக்கட்டு வர்ணனையாளர் மைக் சரவணன்.

"தமிழர் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில் வீரத்தையும், தீரத்தையும் களத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே வீரர்களின் குறிக்கோள். காளை வளர்ப்போரைப் பொருத்தவரை தங்களது காளையின் வேகத்தையும், தாங்கள் வளர்த்த, பயிற்சி அளித்த வித்தையும் உலகறியச் செய்ய வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கிறது.

அவர்களைப் பொருத்தவரை வேட்டியோ அல்லது காரோ எல்லாமே ஒன்றுதான். ஒவ்வோர் ஆண்டும் ஜல்லிக்கட்டில் ஏதாவது ஒரு வகையில் தங்களது பங்களிப்பு கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பமாக இருக்கிறது," என்று மைக் சரவணன் விவரிக்கிறார்.

அத்துடன், "ஜல்லிக்கட்டு விளையாட்டுதான் இளைஞர்கள் தீயப் பழக்கங்களுக்கு ஆளாகாமல் காக்கிறது. காளைகளை அடக்க விரும்பும் வீரர்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதால் அவர்கள் பயிற்சி, சத்தான சரிவிகித உணவு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றனர். அதுபோல், ஜல்லிக்கட்டுதான் நாட்டு மாடுகளை வளர்க்க விவசாயிகளைத் தூண்டுகிறது. வீட்டில் ஒருவராக செல்லப் பிள்ளை போல சகல வசதிகளுடன் ஜல்லிக்கட்டு காளைகளை அவர்கள் வளர்க்கின்றனர்," என்று அவர் கூறுகிறார்.

மைக் சரவணனின் கருத்தையே அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் கடந்த ஆண்டு முதல் பரிசை வென்ற மண்ணின் மைந்தன் கார்த்திக்கும் பிரதிபலிக்கிறார். 24 காளைகளை அடக்கி முதலிடம் பிடித்த அவருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் கார் பரிசாக வழங்கப்பட்டது.

தற்போது, கல்லூரியில் இளங்கலை மூன்றாம் ஆண்டு உடற்கல்வியியல் பயிலும் அவர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். குடும்பத்தின் பொருளாதார நிலை கருதி விடுமுறை நாட்களில் கொத்தனார் வேலைக்குச் சென்று வருபவர்.

இத்தகைய குடும்ப பின்னணி கொண்டுள்ள கார்த்திக்கால், கடந்த ஆண்டு அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் முதல் பரிசாக கிடைத்த காரை பெருமை சேர்க்கும் கவுரமிக்க பொருளாக நீண்ட நாள் வைத்திருக்க முடியவில்லை. குடும்பத்தின் கடனை அடைக்க, ஷோரூமில் இருந்து வந்ததுமே அவர் காரை விற்றுவிட்டார்.

இந்த ஆண்டும் ஜல்லிக்கட்டில் பங்கேற்க வழக்கம் போல் உற்சாகமாக கார்த்திக் தயாராகி வருகிறார். கார்த்திக் மட்டுமல்ல, ஜல்லிக்கட்டில் காளைகளை எதிர்கொள்ளும் வீரர்கள் அனைவருமே அதற்காக தவம் போல் தயாராகின்றனர்.

உடலை வலிமையாக்கி, பயிற்சி பெறுவது மட்டும் ஜல்லிக்கட்டு வீரர் தயாராகும் விதமல்ல. ஒரு மாதத்திற்கு முன்பே காப்பு கட்டி விரதமிருந்து ஜல்லிக்கட்டில் பங்கேற்க வீரர்கள் தயாராகின்றனர். ஏனென்றால், ஜல்லிக்கட்டு என்பது அவர்களுக்கு வெறும் விளையாட்டு அல்ல, மாறாக மண்ணின் வீரத்தை பறைசாற்றும் களம் என்கிறார் மைக் சரவணன்.

ஆகவே, பரிசுகள் ஒரு பக்கம் இருந்தாலும், ஜல்லிக்கட்டில் கலந்து கொண்டு காளைகளை அடக்கிய வீரர் என்ற பெருமையை பெறுவதிலேயே இளைஞர்கள் பெருமிதம் கொள்வதாக மைக் சரவணன் தெரிவித்தார்.



# இலங்கை ஈஸ்டர் தாக்குதலுக்கு இழப்பீடு கொடுப்பது போதுமா?

ரஞ்சன் அருண்பிரசாத்

## பாதிக்கப்பட்டோர் நினைப்பது என்ன?

இலங்கையில் 2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் குண்டு வெடிப்பின் மூலம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு, நட்டஈட்டு தொகையை வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு தாக்குதலை தவிர்ப்பதற்கு தவறியதன் ஊடாக, தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக தெரிவித்து, பாதிக்கப்பட்ட தரப்பினரால் 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இதன்படி, 2019ம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்த போதிலும், அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் ஊடாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, முன்னாள் போலீஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர, அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தன, முன்னாள் தேசிய புலனாய்வு பிரதானி சிசிர மென்டிஸ் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 மில்லியன் ரூபாயும், முன்னாள் போலீஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வு பிரதானி நிலந்த ஜயவர்தன ஆகியோர் 75 மில்லியன் ரூபாய் வீதமும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ 50 மில்லியன் ரூபாயும் செலுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் புலனாய்வு பிரதானி சிசிர மென்டிஸ் 10 மில்லியன் ரூபாயை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு செலுத்த வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதலில் உயிரிழந்த ஒருவருக்கு தலா ஒரு மில்லியன் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா ஐந்து லட்சம் ரூபாயும் வழங்க வேண்டும் என அரசாங்கத்திற்கு, உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இந்த தீர்ப்பு குறித்து, பாதிக்கப்பட்ட தரப்பினரை சந்தித்து வினவிய போது:

கொழும்பு - முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த கோமஸ், ஈஸ்டர் குண்டு வெடிப்பில் தனது மகன், மருமகள் மற்றும் மூன்று பேரப் பிள்ளைகளை இழந்துள்ளார்.

கொழும்பு - கொச்சிகடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்திருந்தனர்.

இந்த நிலையில், உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து, கோமஸ் கருத்து தெரிவித்தார்.

கேள்வி :- உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு திருப்தியளிக்கின்றதா?

பதில் :- இல்லை. இல்லையென்றே சொல்ல வேண்டும். காரணம், இது ஏற்கனவே வழங்கப்பட்டிருக்க வேண் டிய ஒன்று. கால தாமதமாகிலும், இந்த தீர்ப்பு வந்ததற்கு ஓரளவிற்கு நாங்கள் திருப்தி அடைகிறோம். ஏனென்றால், நாங்கள் அவர்களை பற்றிய சிந்தனை யிலும் அவர்களின் இழப்பை பற்றிய சிந்தனையிலும் எப்போதும் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் சிறிய தொரு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவே கருத்திற் கொள்கின்றோம்.



கேள்வி :- இந்த சம்பவத்திற்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றால், எவ்வாறானதொரு நியாயத்தை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில் :- இறைவனின் தீர்ப்பை தவிர நாங்கள் எதுவும் மேலதிகமாக எதிர்பார்க்க முடியாது. அவர்கள் ஏற்கனவே சம்பாதித்ததில் ஒரு சிறிய பங்கை இழக்கின்றார்கள்.

அவ்வளவு தான். இது எங்களுக்கு எந்தவிதத்திலும் திருப்தி இல்லை என்று சொல்வதற்கு காரணம், எங்களுடைய அன்றாடத் தேவைகளை பொருத்த வரை ஒரு பக்கம் இந்த பணத்தின் மூலம் திருப்தி அடையலாம். ஆனால், இழந்தை எந்தவிதத்திலும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவினால் திருப்பி கொடுக்க முடியாது. எவ்வளவு பொறுப்பாக நடந்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் அவர் அந்த ஜனாதிபதி நாற்காலியை மாத்திரம் யோசித்தாரே தவிர, பொறுப்புக்களை தட்டிக் கழித்து விட் டார்.

அது இந்த தீர்ப்பின் மூலம் நன்றாக விளங்குகின்றது. அனைவரையும் பாது காக்குமாறு கோரியே ஜனாதிபதியாக நாங்கள் அவரை தேர்ந்தேடுத்தோம். ஆனால், அவர் அதை முழுமையாக செய்யவில்லை என்கின்றது தீர்ப்பாக வழங்கப்பட்டுள்ளது என்பதை உணர்கிறோம்.

கேள்வி :- இந்த தீர்ப்பை குடும்பத் தில் உள்ளவர்கள் எவ்வாறு பார்க்கின் றார்கள்?

பதில் :- அவர்களினாலும் இதனை ஜீரணிக்க முடியாது என்றுதான் நான் நினைக்கின்றேன். ஏனென்றால், எங் களுக்கு பண ரீதியிலான குறைபாடு பெரிதாக தெரியவில்லை. எனது குழந்தைகளின் சகோதரன், என்னுடைய மகன் எனக்கு பிறகு கிடைப்பாரா? கிடைப்பதற்கு ஏதாவது உத்தரவாதத்தை இவர்கள் கொடுப்பார்களா? என்னுடைய குழந்தைகள் என்னுடன் செலவிட்ட நாட்கள், நடந்துக்கொண்ட விதங்கள், இன்னும் எங்களை துக்கத்தில் ஆழ்த்தி இருக்கின்றதே தவிர, இந்த பணத்தினால் அதனை திருப்திப்படுத்த முடியாது.

கேள்வி :- பொருளாதார நெருக்கடி தற்போது நாட்டை பெரிதும் பாதித்திருக்கின்றது. உங்களது மகன், உங்களின் குடும்பத்திற்கு உழைத்துக் கொடுக்கும் நபராக இருந்துள்ளார். அவர் இந்த தருணத்தில் உயிருடன் இருந்திருந்தால், இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நீங்கள் எவ்வாறு மீண்டெழுந்திருப்பீர்கள்?

பதில் :- இதுவொரு நல்ல கேள்வி. என்னுடைய இறந்த மகன் நல்ல உழைப்பாளி. அவன் ஒரு நேரம் கூட வீட்டில் இருப்பதில்லை. ஆட்டோ ஒன்று இருந்தது. ஆட்டோ செலுத்திக் கொண்டு, வேலைக்கும் சென்றார். ஒரு நாளைக்கு இரண்டு வேலைகளை செய்யக்கூடிய ஒரு உழைப்பாளியாக இருந்தார். எனக்கு நல்ல உதவியாக இருந்தது. இப்போதுள்ள பொருளாதார பிரச்னைக்கு அவர் இருந்திருந்தால், கஷ்டம் கொஞ்சம் குறைந்திருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.



கேள்வி :- இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் அல்லது பொறுப்பிலிருந்து தவறியவர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு எதிர்வரும் காலங்களில் நீதித்துறை ஊடாக எவ்வாறானதொரு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் முன்வைக்கிறீர்கள்?

பதில் :- அநேகமாக நான் எதிர்பார்க்கின்றது அவர்கள் அனைவரையும் உள்ளே தள்ள வேண்டும். உள்ளே இருக்கும் போது, என்ன பொறுப்பை தவறவிட்டார்கள் என்பதை அவர்கள் உணர்வார்கள். ஏன் நான் இப்படி செய்தேன் என்பதை தனிமையில் இருக்கும் போது ஓரளவுக்கேனும் உணர்வார்கள். அதனை உணரும் விதமாக சரி, அவர்களை உள்ளே தள்ள வேண்டும். அவர்களை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. பணத்தை கொடுத்து, தப்பிச் சென்று விடாமல், உள்ளே தனிமையில் இருந்து அவர்கள் உணர வேண்டும்.

இறந்த ஆத்மாக்களுக்கு தாங்கள் செய்த துரோகம் என்ன என்பதை உணர வேண்டும். இந்த வேதனையை அவர்கள் உணர வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் இறந்தவர்களின் தாய், தந்தையர்கள் படும் பாடு, வேதனையை இவர்கள் இன்னும் உணரவில்லை. இந்த தீர்ப்பின் ஊடாக அவர்களின் பொருளாதாரத்தில் ஒரு சிறிய பகுதியைத்தான் இழக்கின்றார்கள். முழுவதையும் இழக்கவில்லை. அவர்களை உள்ளே தள்ளி, அவர்கள் தனிமையில் இருந்து, என்ன நடந்தது என்பதை யோசிக்கும்.

(பிபிசி)

# நட்டஈட்டைச் செலுத்துவதற்கு நான் உண்டியல் குலுக்குவதா?

## இப்படி நண்பர்களிடம் கேட்டாரம் மைத்திரி

கொழும்பு, ஜன. 16

ஈஸ்டர் தாக்குதல் நட்ட ஈட்டு தொகையை திரட்டு வதற்கு புறக்கோட்டையில் உள்ள அரச மரத்தடியில் ரின் (உண்டியல்) ஒன்றை கையில் ஏந்திக்கொண்டு குலுக்கிக் கொண்டு இருக்க வேண்டுமா என நண்பர்களிடம் கேட்டேன் என்று கூறியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று நிட்டம்புவ பொது விளையாட்டரங்கில் இடம் பெற்ற நிகழ்வில் இதனை தெரி வித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரி விக்கையில்,

ஜனாதிபதியால் நியமிக்கப் பட்ட அதிகாரிகள் தவறு செய் தால் அதற்கு ஜனாதிபதியும் பொறுப்பு என்று உச்ச நீதிமன்ற தீர்ப்பில் எழுதப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகி யோரை ஜனாதிபதி நியமிக்கும் நிலையில், அவர்கள் அந்த பொறுப்பை நிறைவேற்றாத தற்கு நானும் பொறுப்பு.

இந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி, அமைச்சர், பாரா ளுமன்ற உறுப்பினர் மற்றும் பிரஜை என்ற வகையில் நான் சட்டத்தையும் நீதித்துறையை யும் மதிக்கிறேன். நீதிமன்ற தீர்ப்புக்கு தலைவணங்கு கிறேன். அதில், எந்த பிரச் னையும் இல்லை. ஈஸ்டர் தாக்கு தலின்போது நான் வெளிநாட் டில் இருந்தேன் என்பது அனை வருக்கும் தெரியும். நான் இலங் கைக்கு வந்த நாள் முதல், ஜனா திபதியாக இருந்த காலத்திலும், பாராளுமன்றத்திலும், பல்வேறு இடங்களிலும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அந்தச் சம்ப வம் குறித்து தகவல் கிடைத்த தாக நான் பலமுறை கூறி வந்தா லும், அந்த அதிகாரிகள் யாரும் அதை எனக்குத் தெரிவிக்க வில்லை.

உச்ச நீதிமன்ற தலைமை நீதி பதி உட்பட ஏழு நீதிபதிகள் அளித்த தீர்ப்பு 85 பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த 85 பக்கங்களில், அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்திருந்தாலும், முன்னாள் ஜனாதிபதிக்கு எந்த விதத்திலும் தெரியாமல் இருந்த தாகக் கூறப்படுகிறது. அதாவது ஈஸ்டர் தாக்குதல், புலனாய்வுப் பிரிவினர், பாதுகாப்புத் திணைக் களம், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் நிலையத் தளபதிகள் என இவர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டும், அது தொடர்பில் எனக்குத் தெரிவிக் கப்படவில்லை என கடந்த நான்கு வருடங்களாக நான் கூறி வருகின்றேன். இது குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட



வில்லை என்பது நீதிமன்றத்தின் 85 பக்க தீர்ப்பில் தெளிவாக உள்ளது.

எனக்கு எப்படி பத்து கோடி ரூபாய் வழங்குமாறு முடிவு செய்தார்கள் என்று இப்போது நீங்கள் நினைக்கலாம்.

10 கோடி ரூபாய் இழப்பீடு கொடுக்கும் அளவுக்கு என்னி டம் பொருளாதாரம் இல்லை. அதுபற்றிய உண்மைகளை நான் கூறமாட்டேன். இது தொடர்பாக நானும் எனது நண்பர்களும் எங்கள் நெருங் கிய நண்பர்களிடம் பணம் வசூலிக்க முடிவு செய்துள் ளோம். எனினும், அந்த நட்ட ஈட்டு தொகையை திரட்டுவ தற்கு புறக்கோட்டையில் உள்ள அரச மரத்தடியில் ரின் ஒன்றை கையில் ஏந்திக்கொண்டு குலுக் கிக்கொண்டு இருக்க வேண்டுமா என நண்பர்களிடம் கேட்டேன்.

எனது அன்பான நண்பர்கள் பலர் என்னிடம், உங்களிடம் வருமான ஆதாரங்கள் இல்லை. அதனால் உங்கள் பொருளாதா ரம் எப்படி இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியும் என்றார் கள். - என்றார். (ஐ)

# அனுமதிப்பத்திரமின்றி மரங்களை ஏற்றிச்சென்ற கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜன. 16

அனுமதிப்பத்திரம் இன்றி பலாமர குற்றிகளை ஏற்றிச்சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று களுத்துறை - அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம உத்தியோகத்தர் ஒரு வர் வழங்கிய தகவலின் பிர காரம், அகலவத்தை, கூடலிகம வீதியில் வைத்து ஜீப் ஒன்றை சோதனையிட்டபோது 8 பலா மரக் குற்றிகள் கைப்பற்றப்பட் டன. அத்துடன், பொலிஸ் கான்ஸ்டபிளும் கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாமரக் குற்றிகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட ஜீப் வண்டியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# நீர்த் தாரைப் பிரயோகத்தை குளியலாக்கிய இளைஞர்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 16

போராட்டக்காரர்கள்மீது பொலிஸார் தண்ணீர் தாரைப் பிரயோகம் செய்து கலைக்க முயன்றபோது, அந்த தண்ணீரில் ஷம்போ போட்டு சில இளைஞர்கள் குளித்த படங்கள் வெளியாகி யுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு தேசிய பொங்கல் விழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நல்லூருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்திருந்தார்.

அவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து காணாமலாக்கப்பட் டோரின் உறவுகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு பேரணி நடத்தினர்.

போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரை பிரயோ கம் செய்தனர். அப்போதே அந்த இளைஞர்கள் இந்த செயலை அரங்கேற்றினர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**16.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி TV CHANNEL - 2

**16.01.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# தைப்பொங்கல் திருநாள் அம்பாறையில் சிறப்பு!

அக்கரைப்பற்று, ஜன. 16

**அம்பாறை மாவட்டத்தில், சமய வழிபாடுகளோடு தைத்திருநாள் கொண்டாட்டங்களில், மக்கள் பங்கேற்றனர்.**

தைபிறந்தால் வழிபிறக்கும் எனும் நம் பிக்கையோடு விவசாயிகளும் பொது மக்களும் தைமகளை வரவேற்று அதிகாலை நேரத்தில் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் பொங்கலிட்டு, வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயம், ஆஞ்சநேயர் ஆலயம், ஸ்ரீ வீரம்மா காளியம்மன், ஸ்ரீ சீரடி சாயி பாபா ஆலயம் உள்ளிட்ட பல்வேறு ஆலயங்களிலும் சிறப்பு பூஜைகள் இடம்பெற்றன.

# தொற்றாநோய் விழிப்புணர்வுக்காக அறுகம்குடா வரை மிதிவண்டி பவனி!

திருக்கோவில், ஜன. 16

மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு மிதிவண்டி பவனி அம்பாறை தொடக்கம் பொத்துவில் அறுகம் குடா வரை நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை பொது வைத்தியசாலை ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில், அம்பாறை பொது வைத்தியசாலை ஊழியர்கள் மற்றும் படையினர் இணைந்து மக்கள் மத்தியில் பரவி வரும் தொற்றா நோய் (நீரிழிவு இதயநோய் உயர் இரத்த அழுத்தம் சீறுநீரகநோய்கள் புற்று நோய்) தொடர்பான விழிப்புணர்வு மிதி வண்டி பவனியை நடத்தியிருந்தனர்.

அம்பாறையில் இருந்து ஆரம்பமான இந்தப் பவனி இறக்காமம் அக்கரைப்பற்று ஊடாக திருக்கோவில் பாதை ஊடாக அறுகம் குடாவை அடைந்தது.

இவ் விழிப்புணர்வு நடவடிக்கையில் பங்குபற்றியவர்களுக்கான தாகசாந்தி ஏற்பாடானது திருக்கோவில் பிரதேச செயலகத்தின் ஊடாக பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் காஞ்சிரங்குடா முகாம் படையினரின் உதவியுடன் இடம் பெற்றது. (ஐ)





# மாமாங்க பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் திருநாள் சிறப்பு வழிபாடு!

மட்டக்களப்பு, ஜன. 16

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில், தைத்திருநாள் சிறப்பு வழிபாடுகள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஆதி சௌந்தரராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

ஆலயத்தின் முன்றலில் பொங்கல் பொங்கி, சூரிய பகவானுக்கு, படைத்து, அதன் பின்னர் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

நாட்டு மக்கள் நோய்நொடியற்று, சமாதானத்துடன் வாழ வேண்டி, மாமாங்கேஸ்வரருக்கு சிறப்பு தீபாராதனைகள் மற்றும் அபிஷேகங்களும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தல் கூட்டுக்கள் மக்களின் அபிலாசைகளை வெல்லவேண்டும்!

மட்டக்களப்பு, ஜன. 16

தேர்தல் கூட்டுக்கள் மக்களின் அபிலாசைகளை வெல்லக்கூடிய வகையில் அமைய வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் என்று ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் இரா. ராஜராஜேந்திரா தெரிவித்துள்ளார்.

ஈழவர் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் இரா. பிரபாகரன் கட்சி செயல்பாடுகளை முன்னெடுப்பது அவரின் ஜனநாயக உரிமை என்றும் அவர் கூறினார்.

கிழக்கு ஊடக மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பில் கட்டுப்பணத்தை முஸ்லிம் காங்கிரஸ் செலுத்தியது

மட்டக்களப்பு, ஜன. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, நேற்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் செலுத்தியது.

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உப தலைவர், அலி ஷாகிர் மௌலானா, காத்தான்குடி நகர பிதா மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் இணைந்து கட்டுப்பணத்தை செலுத்தினர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில்,

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டு. தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தெரிவானோருக்கான நேர்முக தேர்வு!

மட்டக்களப்பு, ஜன. 15

மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் 2023 புதிய மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் தேர்வுக்கான திகதிகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 04 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப் பட்டவர்களுக்கான கடிதங்களில் ஒரு தொகுதி நேற்றுதபாலிடப்பட்டன. ஏனையவை இன்று திங்கட்கிழமை தபாலிடப்படும் எனவும் தெரி விக்கப்பட்டது.

தேர்வாகும் ஆசிரிய மாணவர்களுக்கான பதிவு மார்ச் மாத நடுப்பகுதியில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# திருக்கோவில் செயலகத்தில் சிறப்பாக நடந்த பொங்கல் விழா!

திருக்கோவில், ஜன. 16

திருக்கோவில் பிரதேச செயலக பொங்கல் விழா பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் கோலாகலமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தத் தைப்பொங்கல் விழாவை சிறப்பிக்கும் முகமாக மேல் மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூக பண்பாட்டு அறப்பணி மன்றத்தின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட வசதி குறைந்த குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இந்தப் பொங்கல் விழாவில் அக்கரைப்பற்று நர்த்தனா கலைகலா மன்றத்தினரின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பல தரப்பினரும் பங்கேற்றனர். (ஐ)



# தமிழரசின் தீர்மானத்தை நோக்கி பயணிக்கவுள்ளோம்!

**சாணக்கியன் எம். பி.**

மட்டக்களப்பு, ஜன. 16

தொழில்நுட்ப ரீதியில் ஆராய்ந்து, தனித்து களமிறங்கும் முடிவைத் இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்துள்ள நிலையில், அதை நோக்கிப் பயணிக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேர்தலின் பின்னர், தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து பயணிக்கும் என்றும் இதன் போது அவர் மேலும் கூறினார். (ஐ)



நைஜீரியாவின் வணிக தலைநகரான லாகோஸில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்டு சண்டையில் இரு கிடாய்கள் தமது கொம்புகளால் முட்டி மோதுகின்றன.

# சீனாவில் கொரோனாவுக்கு 60 ஆயிரம் பேர் உயிரிழப்பு!

பீஜிங், ஜன. 16

கடந்த டிசெம்பர் முதல் கொரோனா பாதிப்பால் தங்கள் நாட்டில் சுமார் 60 ஆயிரம் பேர் பலியாகினர் என்று சீன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த டிசெம்பரின் தொடக்க காலம் முதல் கொரோனா பாதிப்பால் நுரையீரல் செயலிழந்து 5 ஆயிரத்து 503 பேரும், ஏற்கெனவே உடல்நலக் குறைபாடுகள் இருந்த நிலையில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு 54 ஆயிரத்து 435 பேரும் உயிரிழந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உயிரிழப்புகள் அனைத்தும் மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ளன என்று ஆணையம் கூறியுள்ளது. எனவே, மருத்துவமனைகளுக்கு வெளியே மேலும் பலர் கொரோனாவுக்கு பலியாகியிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.



அண்மைக்காலமாக கொரோனா பாதிப்பு விவரங்களை சீன அரசு மறைப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. அதையடுத்து இந்த புள்ளிவிவரங்களை தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்டுள்ளது.

சரியாக டிசம்பர் 8ஆம் திகதி முதல் ஜனவரி 12ஆம் திகதி வரை 59 ஆயிரத்து 938 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் 90 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் 65 மற்றும் அதற்கு மேல் வயதானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சீனாவின் வுஹான் நகரில் 2019 டிசெம்பரில் முதன் முறையாக கொரோனா கண்டறியப்பட்டது. இதன் பின்னர, அங்கு 65 ஆயிரத்து 210 பேர் உயிரிழந்தனர். எனினும், கடுமையான விதிமுறைகளை பின்னபற்றிய அரசு கொரோனா பரவலை பூச்சிய நிலைக்கு கொண்டு வந்தது. இந்நிலையில், 3 வருடங்களின் பின்னர் மீண்டும் பரவ ஆரம்பித்துள்ள கொரோனா தொற்றால் ஒரு மாதத்தில் சுமார் 60 ஆயிரம் பேர் உயிரிழந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், தலைநகர் பீஜிங் உள்ளிட்ட முக்கிய நகரங்களில்தான் கொரோனா பாதிப்பு அதிகம் உள்ளது. அங்குள்ள மருத்துவமனைகளில் கொரோனா பாதிப்பால் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சீன மக்கள் தொகையில் 64 சதவீதம் பேர், அதாவது சுமார் 90 கோடி பேர், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஏற்கெனவே தகவல் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேவாலயம் மீது தாக்குதல் மியன்மாரில் ஐவர் மரணம்!



யங்கூன், ஜன. 16

மியன்மாரில் உள்ள தேவாலயங்களில் அந்த நாட்டு இராணுவம் நடத்திய விமானத் தாக்குதலில் 2 வயது குழந்தை, தாய் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். மேலும், ஒரு பெண், சிறுமி ஆகியோர் காயமடைந்தனர்.

மியன்மாரின் கரேன் பழங்குடியினர் வசித்து வரும் இரு கிராமங்களிலுள்ள 4 தேவாலயங்கள்மீது இந்தத் தாக்குதல் வியாழக்கிழமை நடத்தப்பட்டதாக மனித உரிமைகள் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

மியன்மாரில் கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. எனினும், அந்தத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி அவரின் ஆட்சியை இராணுவம் கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி கலைத்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. சில குழுக்கள் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்திலும் ஈடுபட்டன. இந்தச் சூழலில், தாய்லாந்து எல்லையை ஒட்டி அமைந்துள்ள காயின் மாகாணத்துக்கு தன்னாட்சி உரிமை கோரி நீண்ட காலமாகப் போராடி வந்த கரேன் பழங்குடியினர், இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராகத் தமது ஆயுதப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.

இதையடுத்து, அவர்கள் மீது மியன்மார் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் ஏராளமான அப்பாவி பொது மக்கள் உயிரிழந்து வருகின்றனர் என்று குற்றம்சாட்டப்படுகிறது. (ஐ)

## இஸ்ரேல் அரசுக்கு எதிர்ப்பு 80 ஆயிரம் பேர் திரள்வு!



ரெல்அவிவ், ஜன. 16

இஸ்ரேலின் நீதித்துறை கட்டமைப்பை மாற்றியமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக சுமார் 80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் ரெல்அவிவில் கூடி எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்த சீர்திருத்தங்கள் நீதித்துறை சுதந்திரத்தை முடக்கும், ஊழலை வளர்க்கும், சிறுபான்மையினரின் உரிமைகளை பின்னுக்குத் தள்ளும் மற்றும் இஸ்ரேலின் நீதிமன்ற அமைப்பின் நம்பகத்தன்மையை இழக்கும் என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அத்துடன், உச்சநீதிமன்ற தீர்ப்புகள் உள்ளிட்டவற்றை பாராளுமன்றத்துக்கு எளிதாக மாற்றும். பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவால் முன்மொழியப்பட்ட மாற்றங்களை “ஜனநாயக ஆட்சியின் மீதான தாக்குதல்” என எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர்.

இதேசமயம், ஜெருசலேமில் உள்ள பிரரதமரின் இல்லத்துக்கு வெளியேயும் வடக்கு நகரமான ஹைபாவிலும் பேரணிகள் நடைபெற்றுள்ளன. (ஐ)

## உக்ரைன் நகர்களில் ரஷ்யா தொடர் ஏவுகணை தாக்குதல்!

- சிறுவர்கள் உட்பட 14 பேர் மரணம்!
- அத்தியாவசிய சேவைகள் பாதிப்பு

கீவ், ஜன. 16

உக்ரேனியர்களின் பாரம்பரிய புத்தாண்டு தினத்தில் உக்ரைன் மீது ரஷ்யா புதிய ஏவுகணை தாக்குதல்களை தொடுத்துள்ளது. டினிப்ரோ நகரில் சனிக்கிழமை நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்களால் தலைநகர் கீவ், கார்கீவ், ஒடேசா நகரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏவுகணைகள் நகரங்களின் உட்கட்டமைப்புகளை தாக்கியுள்ளன. இதனால், அத்தியாவசிய சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதேநேரம், தகவல்களை பெறுவதும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

சனிக்கிழமை உக்ரேனியர்களின் பாரம்பரிய புத்தாண்டு தினமாகும். இந்த நாளிலேயே ரஷ்யா தாக்குதலை நடத்தியுள்ளது.

டினிப்ரோவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 9 மாடி கட்டடம் ஒன்று முழுமையாக அழிக்கப்பட்டது. 14 சிறுவர்கள் உட்பட 73 பேர் காயமடைந்துள்ளனர் மீட்பு பணிகள் தொடர்கின்றன. 6 சிறுவர்கள் உட்பட 38 பேரே நேற்றுக் காலை வரை மீட்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)



# கலிபோர்னியாவில் வெள்ளத்தால் 2.5 கோடி பேர் பாதிக்கும் அபாயம்!



கலிபோர்னியா, ஜன. 16

அமெரிக்காவின் - கலிபோர்னியாவில் சுமார் இரண்டரை கோடி மக்கள் வெள்ளத்தை எதிர்நோக்கும் அபாயத்தில் உள்ளனர் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் தொடர் புயல்களால் கலிபோர்னியா மாநிலம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பல நீர்வழிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தால் சுமார் 19 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் வீடுகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலிருந்து வடமேற்கே 135 கி.மீற்றர் தொலைவில் மன்டெசிட்டோ நகர மக்கள் அதிக மழைவீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2018ஆம் ஆண்டு இந்த நகரில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் 23 பேர் கொல்லப்பட்டனர். இதன் பின்னர் அங்கு ஏற்பட்டுள்ள பெரும் இயற்கைப் பேரிடர் இதுவாகும்.

2019ஆம் ஆண்டு முதல் பெரும் வறட்சியின் பிடியிலிருந்து கலிபோர்னியாவில் கடந்த 16 நாட்களில் மட்டும் 24 ட்ரில்லியன் கலன் தண்ணீர் விழுந்துள்ளது என்று அந்த மாநிலத்தின் ஆளுநர் நியூசோம் தெரிவித்துள்ளார். இந்நிலையில், தண்ணீரை நிர்வகிக்கும் முறையில் மாற்றம் தேவை என்று அவர் கூறுகிறார்.

வடக்கு கலிபோர்னியாவில் டிசெம்பர் மாத இறுதியில் வீசத் தொடங்கிய தொடர் புயல்களின் தாக்கத்தால் திராட்சை தோட்டங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன், வரலாற்று சிறப்புமிக்க துறைமுகம் அழிக்கப்பட்டுள்ளது. கடற்கரை நகரம் வெள்ளத்தால் அழிவுண்டுள்ளது.

இதேநேரம், கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கலிபோர்னியாவுக்கு உதவுவதற்கு ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். (ஐ)




## விராட் கோலி 46ஆவது சதம்!

*திருவனந்தபுரம், ஜன. 16*

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் விராட் கோலி 46ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இலங்கைக்கு எதிரான இருபது - 20 தொடரை 2-1 என வென்றது இந்திய அணி. இந்நிலையில், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடக்கிறது.

இதில், நேற்று நடந்த போட்டியில் விராட் கோலி 85 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அவர், 110 பந்துகளை சந்தித்து 166 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்திருந்தார். இதில், 8 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகள் அடங்கும். (ஐ)




## களத்தடுப்பில் மோதுண்ட இலங்கையின் வீரர்கள்!

*திருவனந்தபுரம், ஜன. 16*

இந்தியாவுக்கு எதிரான நேற்றைய போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த இலங்கையின் வொண்டர்ஸே மற்றும் அஷேன் பண்டார ஆகியோர் மோதுண்டு காயமடைந்தனர்.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

போட்டியின் 42.5 ஆவது ஓவரில் விராட் கோலி அடித்த பந்தை தடுக்க முயன்ற இலங்கை வீரர்கள் இருவர் ஒருவருடன் ஒருவர் மோதி விழுந்தனர்.

ஜெப்ரி வொண்டர்ஸே மற்றும் அஷேன் பண்டார ஆகியோரே இவ்வாறு ஒருவருடன் ஒருவர் மோதுண்டு காயமடைந்தனர். இதையடுத்து இருவரும் மைதானத்துக்கு வெளியே சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

# வீழ்ந்தது பாகிஸ்தான் தொடர் நியூசிலாந்திடம்!

*கராச்சி, ஜன. 16*

கராச்சியில் நேற்றுமுன்தினம் பகலிரவு போட்டியாக நடைபெற்ற 3ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி, பாகிஸ்தான் அணியை 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இதன்மூலம், ஒருநாள் தொடரை 2-1 என்று கைப்பற்றியது.

2008ஆம் ஆண்டுக்கு பிறகு துணைக்கண்டத்தில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றி சாதனை புரிந்துள்ளது நியூசிலாந்து.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு நீண்ட இடைவெளிக்குப் பிறகு அணிக்குத் திரும்பிய தொடக்க இடது கை வீரர் ஃபகர் ஷமானின் 101 ஓட்டங்களும் ரிஸ்வானின் 77 ஓட்டங்களும் கைகொடுத்தன. இதன்மூலம், 9 விக்கெட்களை இழப்புக்கு 280 ஓட்டங்களை எட்டியது பாகிஸதான் அணி.

தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணியில் டெவன் கொன்வே (52), கேன் வில்லியம்சன் (53) அரைச்சதம் அடித்து அடித்தளம் அமைக்க பின்னால் இறங்கிய கிளென் பிலிப்ஸ் 42 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 63 ஓட்டங்களை விளாசியதில் 281/8 என்று அபார வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு 87 பந்துகளில் 100 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் கிளென் பிலிப்ஸ் இறங்கினார், மிட்செல் சாண்ட்னருடன் (15) சேர்ந்து 7வது விக்கெட்டுக்காக 64 ஓட்டங்களை சேர்த்தார். இந்த இணைப்பாட்டம் ஆட்டத்தை மாற்றியது. அணித்தலைவர் கேன் வில்லியம்சன் 68 பந்துகளில் 2 பௌண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்களை எடுக்க, டெவன் கொன்வே 65 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 52 ஓட்டங்களை எடுத்து இருவரும் சேர்ந்து 65 ஓட்டங்களை 2ஆவது விக்கெட்டுக்காக சேர்த்தனர். முதலில் அதிரடி தொடக்க வீரர் பின் ஆலன் 25 பந்துகளில் 4 பௌண்ட்ரிகளுடன் 25 ஓட்டங்கள் எடுத்து தயூப் தாஹிரின் த்ரோவுக்கு ரன் அவுட் ஆகி வெளியேறினார்.

கேன் வில்லியம்சன், டரில் மிட்செல் (31) இணைந்து 52 ஓட்டங்களைச் சேர்த்தனர். நியூசிலாந்து அணி 45 ஓட்டங்களை எடுப்பதற்குள் 4 விக்கெட்களை இழந்தது.

ஓவ் ஸ்பின்னர் சல்மான் (2/42) டெவன் கொன்வே மற்றும் மிட்செலை வீழ்த்தினார். டெவன் கொன்வே தூக்கி அடித்த ஷொட் சரியாக சிக்காமல் ஆட்டமிழக்க டரில் மிட்செல் ரிவர்ஸ் ஸ்வீப் ஷொட்டில் சிக்கினார். வில்லியம்சன் ரன் அவுட் ஆனார்.

கிளென் பிலிப்ஸ் எடுக்கும் முதல் ஒருநாள் அரைச்சதமாகும் இது, இதனை 28 பந்துகளில் எடுத்து முடித்தார்.




ஆனால், அரைச்சதம் அடித்து முடித்தவுடனேயே ஓவ் ஸ்பின்னர் உசாமா மிர் பந்தில் கொடுத்த பிடியெடுப்பை விக்கெட் காப்பாளர் ரிஸ்வான் நழுவ விட்டார். ஆனால், அதன் பிறகு அதிரடியாக ஆடி அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றதோடு அரிய தொடர் வெற்றியையும் துணைக்கண்டத்தில் சாதித்தார்.

நிசிலிலாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிராக தங்கள் கடைசி 6 தொடர்களில் முதல் முறையாக தொடரை வெல்கின்றனர்.

முன்னதாக அணிக்கு மீண்டும் திரும்பிய பகர் ஷமான் 10 பௌண்ட்ரி ஒரு சிக்ஸருடன் 122 பந்துகளில் 101 ஓட்டங்களை எடுத்தார். பகர் ஷமான் பாகிஸ்தான் 21/2 என்று இருந்த போது ரிஸ்வானுடன் சேர்ந்து 3ஆவது விக்கெட்டுக்காக 154 ஓட்டங்களைச் சேர்த்தார். பாகிஸ்தானின் ஷான் மசூத் டக் அவுட் ஆக அணித்தலைவர் பாபர் அசாம் பிரேஸ்வெல் பந்துக்கு காலை நீட்டி தடுத்தாட முயலும் போது மட்டை கால்காப்பில் சிக்கியது, இதனால் கிறீஸூக்கு வெளியே இருந்த பின் காலை கிறிஸூக்குள் நேரத்துக்குக் கொண்டு வர முடியாமல் ஸ்ரொம்ப் ஆனார். முதல் 2 போட்டிகளில் 2 அரைச் சதங்கள் எடுத்த உலகின் முதல்நிலை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் வீரர் பாபர் அசாம் இந்த முறை சோடை போனார். சல்மான் பின்னால் இறங்கி 45 ஓட்டங்களை விரைவாக எடுக்க பாகிஸ்தான் 280 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

300 ஓட்டங்களுக்கும் மேல் எடுக்க வேண்டிய ஆடுகளத்தில் சதம் அடிப்பதற்காக பகர் ஷமான் சுயநலமாக ஆடியதால் அணியின் ஓட்ட எண்ணிக்கை குறைந்தது.

ஆட்ட நாயகன் கிளென் பிலிப்ஸ், தொடர் நாயகன் டெவன் கொன்வே.

## ஓய்வு தொடர்பாக பரிசீலிக்கும் ஷம்பா!

*சிட்னி, ஜன. 16*

டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து பரிசீலிக்கப்போவதாக அவுஸ்திரேலிய சுழல்பந்துவீச்சாளர் அடம் ஷாம்பா கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் நதன் லயன் உள்பட 4 சுழல்பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றுள்ளனர். ஆனால் வெள்ளை நிற பந்து போட்டியில் சிறப்பாக செயல்படும் அடம் ஷம்பா சேர்க்கப்படவில்லை. இதனால் ஏமாற்றமடைந்துள்ள அவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து பரிசீலிக்கப்போவதாக கூறியுள்ளார்.




# அவுஸ்திரேலிய ஓப்பன் இன்று ஆரம்பமாகிறது!

*மெல்பர்ன், ஜன. 16*

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்போர்னில் இன்று திங்கட்கிழமை தொடங்குகிறது.

ஆண்டுதோறும் அவுஸ்திரேலிய ஓப்பன், பிரெஞ்சு ஓப்பன், விம்பிள்டன், அமெரிக்க ஓப்பன் என்று 4 வகையான 'கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான 111ஆவது அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் இன்று தொடங்குகிறது. வருகிற 29ஆம் திகதி வரை நடக்கும் இந்த ரென்னிஸ் திருவிழாவில் முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்கிறார்கள்.

கடந்த ஆண்டு கொரோனா தடுப்பூசி போடாத விவகாரத்தால் அவுஸ்திரேலிய ஓப்பனில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமல் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட முன்னாள் நம்பர் ஒன் வீரர் நோவக் ஜோகோவிச் (செர்பியா), இந்த தொடரில் விளையாட உள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக் (போலந்து) கோப்பையை கையில் ஏந்தும் வாய்ப்பில் முன்னணியில் இருக்கிறார். (ஐ)



# சுற்றுலா பயணத்துக்கு ஏற்ற சிறந்த நாடுகளில் இலங்கைக்கு முதலிடம்!

**கொழும்பு, ஜன. 16**

**2023 ஆம் ஆண்டில் உலகில் பயணம் செய்ய சிறந்த 24 நாடுகளில் இலங்கை முத லிடத்தை பிடித்துள்ளது.**

சுற்றுலா இணையத்தளமான ரவல் ரைஆங்கிள் இணையத் தளத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக் கையின் பிரகாரம், நாட்டின் இயற்கை வளங்களின் அழகு காரணமாக பயணத் திற்கு ஏற்ற முதல் நாடாக இலங்கை மாறி யுள்ளது.

கடற்கரைகள், வனவிலங்கு களால் நிறைந்த வன கட்ட மைப்புகள், ரம்மியம் நிறைந்த தேயிலைத் தோட்டங்கள் மற் றும் பனி மூடிய மலைத் தொடர்கள் என பல சுற்றுலா இடங்கள் தொடர்பான தகவல் களை வெளியிடும் இணையத் தளமாக ரவல் ரைஆங்கிள் இணையத்தளம் காணப்படு கின்றது.

இலங்கையின் செழிப்பு மற்றும் பௌதிக பன்முகத்தன் மையைக் கண்டு சுற்றுலாப் பயணிகள் வியப்படைவதாக ரவல் ரைஆங்கிள் இணையத் தளம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நான்காவது உயரமான மலையான சிறீ பாத மலை உச்சியில் இருந்து பார்க் கும் காட்சி சுவாரஷ்யமாக இருப்பதாகவும், ஒவ்வொரு வரின் உடற்தகுதியைப் பொறுத்து, 5 முதல் 6 மணித்தி யாலங்களுக்குள் இந்த உலக பாரம்பரிய தளத்தில் ஏறலாம் எனவும் ரவல் ரைஆங்கிள் இணை யத்தளம் குறிப்பிட்டுள்ளது.

வாழ்வில் புத்துயிர் பெற வேண்டுமானால், இலங்கையின் கிழக்கு கரை யோரத்தில் நிழ லான இடத்தில் அமர்ந்து விற்ற மின் டியை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் இலங்கை தொடர்பில் ரவல் ரைஆங்கிள் இணையத்தளம் தகவல்களை பதிவு செய்துள்ளது. (அ)

# உயர்தர பரீட்சைக் காலத்தில் மின்வெட்டு நடைமுறையாகாது!

**கொழும்பு, ஜன. 16**

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின்போது மின்வெட்டு அமுல்படுத்தப் படாது என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத் தால் விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைய மின்சார சபை உள்ளிட்ட அதிகாரிகள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகி பெப்ரவரி 17ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறவுள்ளது. அதற்காக 3 இலட்சத்து 31 ஆயிரத்து 709 பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்ப தாரர்கள் தோற்றவுள்ளனர்.

மேலும்,

நாடளாவிய ரீதியில் 2 ஆயி ரத்து 200 பரீட்சை நிலையங் களில் பரீட்சையை நடத்துவ தற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.

இந்நிலையில், பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் மாணவர்களின் நலன்கருதி அவர்கள் பரீட்சை வெற்றிகர மாக முகங்கொடுப்பதற்கும் வேறு சிக்கல்களை எதிர்கொள் ளாமல் இருப்பதற்கும் மின் வெட்டை அமுல்படுத்தாது இருப்பதற்கு பரீட்சைகள் திணைக்களத்தால் விடுக்கப் பட்ட கோரிக்கைக்கு அமைய மின்சார சபை உள்ளிட்ட அதிகாரிகள் இதற்கு இணக்கம் தெரிவித்தனர். எனவே, பரீட்சை நடைபெறும் காலப் பகுதியில் மின்வெட்டு அமுல் படுத்தப்படாது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளின் போது உயர்தரப் பரீட்சையை இடை யூறின்றி நடத்துவது தொடர் பில் தேர்தல்கள் ஆணைக்குழு வுடன் கலந்துரையாடவுள்ள தாக அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (ஐ)

# அரசாங்க ஊழியர்கள் அச்சமடைய வேண்டாம்

**கொழும்பு, ஜன. 16**

அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சேமநல கொடுப்பனவுகள் தொடர்பில் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவை இல்லை. அந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித் துள்ளார்.

அரச வருமானம் மற்றும் செலவுகளை நிர்வகிப்பதில் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று நிதி இராஙக அமைச்சர் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சில செயற் திட்டங்களுக்காக செலுத்த வேண்டியுள்ள கொடுப்பனவை செலுத்துவதற்கான முறையான நடவடிக்கைகள் குறித்து கலந் தாலோசிக்கப்பட்டு வருவதாக வும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ)



# ஓமானிலிருந்து 15 பெண்கள் நேற்று நாடு திரும்பினார்கள்!

**கொழும்பு, ஜன. 16**

ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பெண் பணியாளர்கள் 15 பேர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையை வந்தடைந்துள்ளனர்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் யு. எல். 206 விமானத்தின் மூலம் அவர்கள் அதிகாலை 5 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்று விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓமானில் உள்ள பாதுகாப்பு இல்லத்தில் தற்போது 117 இலங்கை வீட்டுப் பணியாளர்கள் உள்ளனர், அவர்களில் 17 பேரை இலங்கைக்கு அனுப்புவதற்காக ஓமானின் மஸ்கட் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்களில் இருவரின் ஆவணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக மஸ்கட் விமான நிலையத் தால் நிராகரிக்கப்பட்ட நிலையில் மீண்டும் பாதுகாப்பு இல்லங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக் கது. (ஐ)

# வெளிநாட்டு பணம் அனுப்பல் 46 சதவீதமாக அதிகரித்துள்ளது

**கொழும்பு, ஜன. 16**

கடந்த வருடம் வெளி நாட்டு பணியாளர்களின் பணம் அனுப்பல்கள் 46 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பரில் 475.6 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளதாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப் பிட்டுள்ளார்.

குறித்த தொகை கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 325.2 மில்லியன் டொலராக காணப்பட்ட நிலையில், கடந்த வருடம் 150 மில்லியன் அமெ ரிக்க டொடர்களால் அதிகரித் துள்ளது.

# இளைஞர் படுகொலை; மக்கள் போராட்டம்!

**கொழும்பு, ஜன. 16**

குருநாகல் - வாரியபொல - வெலவ பிரதேசத்தில் இரு குழுக்களிடையே நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோதலில் 33 வயது நபர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

கொல்லப்பட்டவர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த "எட்டிகுப்பா" என அழைக்கப்படும் சமரு ருவன் பத்திரண என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மோதலின் போது அவரின் சகோதரர், மூத்த சகோதரி, மற்றுமொருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 இளைஞர்களை விடுவிக்கக் கோரி பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். (ஐ)

# இலங்கை கடனை மறுசீரமைக்க சீன அரசு தயக்கம் காட்டுவது ஏன்?

**கொழும்பு, ஜன. 16**

இலங்கைக்கு வழங்கிய கடனை மறுசீரமைக்க சீனா தயங்குவது குறித்து விளக்கம் வழங்கப்பட் டுள்ளது. சென்னையை தளமாகக்கொண்ட அரசியல் மற்றும் பொருளாதார ஆய்வாளர் என். சத்தியமூர்த்தி இந்த விளக்கத்தை இந்திய செய்தித்தாள் ஒன்றுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கைக்கு மிகப்பெரிய கடன் வழங்குநராக சீனா விளங்குகிறது. இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் ஐந்தில் ஒரு பங்கை சீனாவே வழங்கி யுள்ளது. இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு கடன் வழங்குநர்களில் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்த நிலையில் சீனா இலங்கையின் கடனை மறுசீரமைக்க இன்னும் முன்வராமைக் கான காரணம் வெளிப்படையானது என்று ஆய்வாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சீனா 2013 இல், தமது பட்டுப்பாதை முயற்சியை முன்னெடுத்தது. இதன்மூலம் உலக அரங்கில் அமெரிக்காவுக்கு எதிராக தனது அரசியல் அடித்தளத்தை விரிவுபடுத்துகிறது.

அறிக்கைகளின்படி, சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தின்கீழ் 147 உறுப்பு நாடுகளில் சீனா முதலீடுகளை செய்துள்ளது. 2013 இல் தொடங்கப்பட்டதிலிருந்து 2022 வரை சீனா இந்த நாடுகளில் 932 பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இலங்கைக்கான அல்லது ஒரு நாட்டுக்கான கடனை சீனா தள்ளுபடி செய்தால், ஏனைய கடனாளி நாடுகளும் இந்த உதவியை சீனாவிடம் இருந்து எதிர்பார்க்க வாய்ப்பிருப்பதாக சீனா கருதுகிறது. எனவேதான் சீனா, இலங்கை விடயத்தில் கடன் மறுசீரமைப் புக்கு இன்னும் வரவில்லை என்று ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே கொரோனா பாதிப்பின் பின்னர் தமது நாட்டின் பொருளாதாரமும் பாதிக்கப்பட் டுள்ள நிலையில், தமது நெருங்கிய நாடான பாகிஸ்தானுக்குகூட சீனா கடன்களை தள்ளுபடி செய்யவில்லை என்பதை ஆய்வாளர் சுட்டிக்காட் டியுள்ளார். (அ)

# புற்றுநோய்க்கான மருந்துகள் பெப்வரி மாதத்தில் கிடைக்கும்!

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

**கொழும்பு, ஜன. 16**

தற்போது நாட்டில் தட்டுப் பாடாகவுள்ள புற்றுநோய்க் கான 43 வகை மருந்துகள் அடுத்த மாதமளவில் கிடைக் கும் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்திய கடனுதவி மற்றும் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் மருந்து வகைகள் கொண்டு வரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக்க சிறீ சந்திரகுப்த குறிப்பிட்டார்.

தட்டுப்பாடு நிலவும் மருந்து களை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே இந்த தகவல் வெளியானதாக சுகாதார அமைச்சின் செயலா ளர் குறிப்பிட்டார்.

மருந்துகள் கிடைக்கும் வரை, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட நாட்டிலுள்ள ஏனைய புற்று நோய் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு இய லுமானவரை மருந்துகளை பகிர்ந்து வழங்குவதாக சுகா தார அமைச்சு குறிப்பிட்டுள் ளது. (ஐ)

## 13ஆம் திருத்தம்...

தைப்பொங்கல் தினமான நேற்று தேசிய பொங்கல் விழா நிகழ்வு நல்லூர் சிவன் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

மேலும், எமது நாட்டுக்கு நல்லிணக்கம் அவசியமானது. 30-40 வருடங்களுக்கு மேலாக யுத்தம், மோதல்கள் - குழப்பங்கள் மற்றும் பிரிவினைவாத - இனவாத வங்குரோத்து அரசியல்களால் நாடு பிரிந்திருந்தது. நாம் ஒரே நாட்டில் வாழ வேண்டும். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டும். அதற்காக 75 வருடங்களுக்கு முன்னர் டி. எஸ். சேனாநாயக்க உருவாக்கிய தனித்துவமான இலங்கையை நோக்கி பயணிக்க வேண்டும்.

தைப்பொங்கல் விழா மேடையில் பொங்கல் தயார் செய்வதை கண்டேன். நெருப்பின் மேல் பானையை வைத்து தண்ணீர் மற்றும் பால் என்பவற்றை ஊற்றி அரிசி, கருப்பட்டி என்பற்றை இட்டு பொங்கல் தயாரிக்கப்படுகிறது. இந்த நெருக்கடியான நிலையில் நாம் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பேகர் என அனைவரையும் இட்டு அதன் ஊடாக இலங்கையர் என்ற தனித்துவத்தை உருவாக்குவோம்.

**கட்சி தலைவர்களுடன் அடுத்த வாரம் சந்திப்பு**

வடக்கில் தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்னைகள் குறித்து இந்த விழாவின் பின்னர் ஆராய இருக்கிறோம். பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். நாம் மீண்டும் நாட்டை ஒன்றிணைக்கவும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தவும் வேண்டும் என்று அவர்களிடம் கோரினேன்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சி எம். பிக்களுடன் பேசினேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை மீண்டும் சந்திக்க இருக்கிறேன். நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை பற்றி பெப்ரவரி மாதம் வெளியிட வேண்டும்.

அந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பாராளுமன்றத்துக்கு அறிவிக்கிறேன். அடுத்த வாரம் கட்சித் தலைவர்களை சந்திக்க இருக்கிறேன். இந்தப் பிரச்னைகளை ஒதுக்கியோ காலங்கடத்தியோ தீர்க்க முடியாது. தீர்வு என்ன என்பதை பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் வெளியிட வேண்டும். பல பிரச்னைகள் குறித்து ஏற்கனவே ஆராய்ந்துள்ளோம்.

**உண்மையை கண்டறிய மற்றோர் ஆணைக்குழு**

காணமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவும் பேசியுள்ளோம். என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறிய வேண்டும். அதேபோன்று உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவொன்றை உருவாக்க வேண்டும். இந்த ஆணைக்குழுவை அமைப்பது குறித்து மூன்று வாரங்களுக்கு முன்னர் இராணுவத்தின் கருத்தை வினவியிருந்தேன். உண்மையை கன்டறிவதை நாமும் விரும்புகிறோம். அதன் மூலம் எம்மீதான குற்றச்சாட்டுகளும் நீங்கும் என அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, உண்மையை கன்டறியும் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்க எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

இதேபோன்று பயங்கரவாதத்தை தடுக்கும் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை கொண்டு வர இருக்கிறோம். வடக்குக்கு எதிராக பயன்படுத்துவதற்காக இந்த சட்டத்தை கொண்டு வர தயாராவதாக சிலர் கூறுகின்றனர். நாட்டில் உறதித்தன்மையை ஏற்படுத்தவே இதனை அறிமுகம் செய்ய இருக்கிறோம். கடந்த வருடம் இதனை தெற்குக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது.

அடுத்து காணிப்பிரச்னை காணப்படுகிறது. வன்னியில் வனஜீவராசிகள் திணைக்களத்துடன் தொடர்புள்ள காணிப் பிரச்னை குறித்து ஆராய இருக்கிறோம். அத்தோடு யாழ்ப்பாணத்தில் மீள காணிகளை கையளிப்பது குறித்தும் ஆராயப்படும். யுத்த காலத்தில் இந்தப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக படையினர் 30 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். தற்பொழுது 3 ஆயிரம் ஏக்கர் தான் எஞ்சியுள்ளது. அதிலும் மற்றொரு பகுதியை மீள வழங்க இராணுவம் விருப்பம் தெரிவித்துள்ளது. அது குறித்தும் ஆராயப்படும்.

யாழ் ஆயர் கோரியது போன்று கத்தோலிக்க மற்றும் இந்து ஆலயங்களை மீள நிர்மாணிக்க இருக்கிறோம். 100 வருடங்களுக்கு மேலாக பூசை வழிபாடுகள் நடைபெற்ற ஆலயங்கள் உள்ளன. புதிதாக ஆரம்பித்தவைகளும் உள்ளன.

**13ஆம் திருத்தம் முழுமையாக...**

அடுத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த உத்தேசித்திருக்கிறோம். அது வடக்குடன் மட்டும் தொடர்புள்ள பிரச்னையல்ல. தெற்கில் உள்ள முதலமைச்சர்களும் இதனை அமுல்படுத்துமாறு கோருகின்றனர். இதனை கலந்துரையாடி செயல்படுத்த இருக்கிறோம். இவற்றை எதிர்வரும் ஓரிரு வருடங்களில் கட்டம் கட்டமாக முன்னெடுப்போம்.

வறுமை, பட்டினி, தொழில் இன்மை என்பன தமிழ் - சிங்கள மக்களுக்கு மட்டுப்படவில்லை. அனைவரும் கஷ்டப்படுகின்றனர். அனைவரும் இணைந்து தான் கரைசேர வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரச்னைகள் மட்டுமன்றி மேலும் பல பிரச்னைகள் குறித்தும் ஆராய வேண்டி இருக்கின்றன. மலையக தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எம். பிகளையும் பாராளுமன்ற கட்சித் தலைவர்களையும் அழைத்து இரண்டாம் கட்ட பேச்சு நடத்த இருக்கிறோம். மலையக தமிழ் மக்களை எமது சமூகத்துக்குள் உள்வாங்கி ஏனைய மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகளை வழங்க வேண்டும். நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெற்றுத் தரும் அவர்களை ஒதுக்க முடியாது.

அதன் பின்னர் முஸ்லிம் எம். பிகள் மற்றும் கட்சித் தலைவர்களை அழைத்து பேச இருக்கிறோம். முஸ்லிம் மக்களுக்கும் பல்வேறு பிரச்னைகள் உள்ளன. அவர்களையும் அழைத்து பேச வேண்டியுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமன்றி சிங்கள மக்களுக்கும் பிரச்னைகள் இருக்கின்றன. ஓரங்கட்டப்பட்ட கிராமங்கள் உள்ளன. அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. குல பேதம், வறுமை காரணமாக ஒதுக்கப்படும் நிலை உள்ளது. கிறிஸ்தவ மக்களுக்கு தமது பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம் உள்ளது. அவை குறித்து ஆராய சமூக நீதிக்கான ஆணைக்குழு ஒன்றை உருவாக்க இருக்கிறோம். இந்தப் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்து இலங்கையர் என்ற தனித்துவத்தை உறுதிப்படுத்துவோம். இவை அனைத்தையும் முன்னெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம் - என்றார். (ஐ)

## சென். மேரீஸ்...

துறை சென். மேரீஸ், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணிக்கு சம்பியன் கிண்ணத்துடன் 10 இலட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்படவுள்ளது. இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 4 இலட்சம் ரூபாய் பணப்பரிசும், ஆட்ட நாயகனுக்கு 50 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் சிறந்த பந்து காப்பாளருக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தின் விளையாட்டுத்துறையில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 10 இலட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்படுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதிக்கு...

ஸார் கலைத்தனர்.

தேசிய பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் பொங்கல் விழா நடைபெறும் சிவன் கோயில் பகுதிக்கு வருகை தந்தார்.

இதேசமயம், ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவோம் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னர் அறிவித்திருந்தனர். இந்த நிலையில், அவர்களின் போராட்டம் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான இயக்கம் மற்றும் மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

இவ்வாறு பேரணியாக வந்தவர்களை நல்லூர் அரசடி பகுதியில் பாரதியார் சிலை அருகே வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலிஸார் மறித்தனர். வீதித் தடைகளை அகற்றிவிட்டு போராட்டக்காரர்கள் முன்னேறினர். இதையடுத்து பொலிஸார், இராணுவம், விசேட அதிரடிப் படையினர் அவர்களை மீண்டும் மறித்தனர்.

இதன்போது, இரு தரப்பாருக்கும் இடையேபெரும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரை பிரயோகமும் நடத்தப்பட்டது.

எனினும், பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். போராட்டம் மீது ஏற்படுத்தப்பட்ட அடக்குமுறைகளால் நல்லூர் பகுதியில் பெரும்பதற்றம் நிலவியிருந்தது. (ஐ-03)

## பாடசாலைகள்...

ஞாயிற்றுக்கிழமை என்பதால், பாடசாலைகள் இன்று விடுமுறை என்று நேற்றைய தினம் வதந்திகள் பரவின.

இந்நிலையிலேயே பாடசாலைகள் இன்று வழக்கம் போன்று திறக்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார். (ஐ)

## ரியூனியனுக்கு...

ரியூனியன் தீவின் பொலிஸ் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரெஞ்சு அதிகாரி ஜெரோம் பிலிப்பினி செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இலங்கையில் இருந்து ஒவ்வொரு படகும் வருகை தரும் போதெல்லாம் பிரான்ஸின் சட்டங்களை நாங்கள் சரிவரப் பின்பற்றுகின்றோம். கப்பலில் இருந்து அவசர உதவிக் கோரிக்கை விடுக்கப்பட்டாலோ அல்லது கப்பல் ஆபத்தில் சிக்கினாலோ முதலில் நாங்கள் கடலில் உதவச் செல்கிறோம்.

நாட்டின் கரையை நெருங்கி வருகின்ற கப்பலில் இருந்தோ அல்லது படகில் இருந்தோ அடையாளம் காட்டி ஆபத்து உதவி கோரப்பட்டால் உடனடியாக அதனை மீட்பதே சர்வதேசக் கடப்பாடு என்று கடல் சட்டம் சொல்கிறது. இலங்கைப் படகுகள் விடயத்திலும் நாங்கள் அந்தச் சட்டங்களை மதித்துப் பின்பற்றுகின்றோம். அவர்களை யார் என்று பார்க்காமல் முதலில் பாதுகாப்பாகக் கரைக்குக் கொண்டு வருகின்றோம். காத்திருப்பு மையங்களில் தங்க வைத்து வெளிநாட்டினருக்கான உரிமைகளின் கீழ் அவர்களைப் பராமரிக்கின்றோம்.

அவர்களின் நிலைவரங்கள் பரிசோதிக்கப்பட்டு கோரிக்கைகள் பல நீதிவான்கள் அடங்கிய குழுக்களால் பெறப்படுகின்றன. இதுவரை வருகை தந்த 400 பேரில் 276 பேர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். 120 பேர்வரை இன்னமும் தீவில் தங்கியுள்ளனர். அனைவருமே அரசியல் புகலிடத்தை எதிர்பார்த்துள்ளனர். சுமார் நாற்பது பேருக்கு மட்டுமே தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏனையோரின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

ரியூயனுக்கு வருகின்ற இலங்கை குடியேறிகள் பத்துப் பேரில் ஏழு பேர் அங்கிருந்து திருப்பித் தாயகத்துக்கு அனுப்பப்படுகின்றனர். அங்கு அவர்கள் சட்ட விசாரணைகளை எதிர்கொள்கின்றனர் - என்றார். (ஐ)

## புதிய தேசிய...

குள் அமைச்சரவையில் முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவை செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரில்புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணை தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தேசிய பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## 69 இலங்கை...

7பெண்கள், ஆறு குழந்தைகள் உட்பட படகில் காணப்பட்ட இலங்கையர்கள் அனைவரும் உடல்நல சோதனைகளுக்கு பின்னர் அருகே உள்ள உயர்தரப் பாடசாலை ஒன்றின் உள்ளக விளையாட்டு மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## வலி. வடக்கில்...

மையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அத்துடன், ஏனைய காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என கூறப்பட்டது. பலாலி வீதியின் கிழக்கில் உள்ள விவசாய நிலங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

அந்த பகுதியில் இராணுவத்தின் சில முக்கிய தளங்கள் உள்ளன என்று இராணுவத்தரப்பில் கூறப்பட்டது. அத்துடன், பலாலி விமான நிலையத்துக்கு அருகில் உள்ள அந்த பகுதியில் கட்டடங்கள் கட்டக்கூடாது என்றும் கூறப்பட்டது.

எனினும், விவசாய தேவைக்காக அவற்றை விடும்படி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

அது பற்றி ஆராயுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதுடன், அந்த விடயம் முடிக்கப்பட்டது.

## தமிழரின்...

பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தாமதம் காண்பிக்காதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரிட்டன் அரசாங்கத்துக்கு இருப்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டனிலும், உலகளாவிய ரீதியிலும் தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் அனைத்துத் தமிழர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இது புதிய விளைச்சலை தரும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் நேரம் மாத்திரமல்ல. மாறாக ஓர் சமூகம் என்ற ரீதியில் நாமனைவரும் ஒன்றுபடவேண்டிய நேரமாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“இத்தருணத்தில் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் நீண்டகாலமாக பிரிட்டனுக்கு வழங்கிவரும் பங்களிப்பை நான் நினைவுகூருகின்றேன். அதேவேளை இலங்கையில் சுயநிர்ணய உரிமை, சமாதானம் மற்றும் நீதி ஆகியவற்றை அடைந்துகொள்வதற்காகத் தமிழ்மக்களால் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை நினைவுகூரவேண்டிய தருணமும் இதுவாகும்” என்றும் கெய்ர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## பக்க வடிவமைப்பாளர் தேவை!



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை
**eelanaduweekly@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது
**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## மரண அறிவித்தல்

மண்ணில்
1943 . 10 . 06



விண்ணில்
2023 . 01 . 15

### மரியானந்தம் அல்லேலூயா மரியம்மா (பூமணி)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட மரியானந்தம் அல்லேலூயா மரியம்மா (பூமணி) நேற்று (15.01.2023) ஞாயிற்றுக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தேசு – இசெபல் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியானந்தம் அல்லோலுயாவின் அன்பு மனைவியும், புறோத்மேரி (பவி – அருட்சகோதரி திருக்குடும்ப கன்னியர் சபை), மேரி ஜேம்ஸ் (சுரேஷ்), மேரி பெனடிக்ஷன் (பவுண்), மேரி மௌறியியோ (பேசி – கணக்காளர், JDDCS), மேரி சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் – ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரிடெசில்டா (முகாமைத்துவ உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), நவீனா, சிவகோணேசலிங்கம் (ஊடக ஆசிரியர், மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், ஜேம்ஸ்சடோனி, போல்கிரிசாந், மேரிடன்ஜாந், மேரிசாருகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (16.01.2023) திங்கட்கிழமை மதியம் 12.45 மணிக்கு அவரின் இல்லத்தில் வழிபாடு நடைபெற்று அதனைத் தொடர்ந்து மிருசுவில் சேமக் காலையில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
**குடும்பத்தினர்.**
**077 644 6514,**
**077 199 4684 (மகன்)**

# இந்திய வெளியுறவு அமைச்சருடன் கடன்மறுசீரமைப்பு குறித்து பேச்சு!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



**கொழும்பு, ஜன. 16**

**இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கரின் இலங்கை வருகையின் போது கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகள் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தொழில்சங்க தலைவர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கருடன் இலங்கை அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் எக்சிம் வங்கியுடன் நாங்கள் இந்த வாரம் பேச்சுகளில் ஈடுபட்டோம். தற்போது இது தொடர்பில் இந்தியாவுடன் நாங்கள் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் 19ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். நாங்கள் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை தொடர்ந்து முன்னெடுக்கின்றோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## வல்வெட்டித்துறையில் பறந்தன பட்டங்கள்



தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினமான நேற்று வடமராட்சி – வல்வெட்டித்துறையில் விதவிதமான பட்டங்கள் நேற்று வானில் பறந்தவேளை...!

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.